பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 14 செவ்வாய்க்கிழமை (30-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:247

### கண்காணிப்புக் குழு விளக்கம்:

## ஆள்திரட்டலும் பயிற்சியும் உடன்பாட்டின் பகுதிகளே!

### யுத்தத்துக்கான ஆயுத்தங்களாக அவற்றைக் கருதாதீர்கள்!!

கொழும்பு,ஜூலை30

வழமையான ஆள் திரட்டலும் பயிற்சியும் யுத்தத்துக்கான ஆயுத்தங்களாகக் கருதப்படக்கூடாது. அவற்றை பலம் பற்றிய மாறா நிலைப்பாட்டைப் பேணும் விடயத்திலும் சமாதான நடவடிக்கைகளிலும் இயல்பான பகுதியாகவே கருதவேண்டும்.

- இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு.

"இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நிரந்தர சமாதானத்துக்குத் தயாராகி வருகின்றனர்" என்ற தலைப்பில் கண்காணிப்புக்குழு நேற்று அதன் கொழும்புத் தலைமையகத்தில் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் போருக்குத் தயாராகவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் படிப்படியாகவும் உறுதியாகவும் நடை-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹாட்லிக் கல்லூரியிலிருந்து படையினர் வெளியேறினர்

யாழ்ப்பாணம்,ஜூலை30

கடந்த சுமார் 7 வருடங்களாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் முகாமிட்டிருந்த படையினர் நேற்று அங்கிருந்து வெளியேறினர்.

படையினர் கல்லூரியிலிருந்து வெளியேறுவது தொடர்பான ஒரு வைபவம் நேற்று மாலை இடம்பெற்றது. படை அதிகாரிகளும் கல்வி அதிகாரிகளும் அந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியவற்றிலிருந்து படையினரை வெளியேறக் கோரி, இப்பாடசாலையின் மாணவர்கள் அண்மைக் காலங்களில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்தது தெரிந்ததே.

(ஐ-9)

### கூட்டமைப்பினரை ரணில் சந்திக்கிறார்

கொழும்பு,ஜூலை30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்று சந்திப்பார். யாழ்.குடாநாட்டில் அகதிகளை மீளக்குடியமர்த்துவது குறித்து இச் சந்திப்பில் ஆராயப்படும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர்களை நியமிக்கவும் விலக்கவும்

# தமக்கு வரையறையற்ற அதிகாரம் உண்டு என்று ஜனாதிபதி பிடிவாதம்!



வைகோவின் கைதைக் கண்டித்து, அச்சுவேலி பஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தின் இறுதியில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிக்கப்படுகிறது. (ஐ-9)

## பிரதமருக்கு சூடான கடிதம்

கொழும்பு,ஜூலை30

**அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் விலக்கும் விவகாரத்தில் ஜனாதிபதி என்ற முறையில் தனக்கு வரையறையற்ற தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.**

தம்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய அமைச்சர் ரவி கருணாநாயக்கவைத் தொடர்ந்தும் தமது அமைச்சரவையில் வைத்திருக்க முடியாது என்று தெரிவித்து, அது தொடர்பாகப் பிரதமரின் கருத்தைக் கோரி, அவருக்கு ஒரு கடிதத்தை ஜனாதிபதி அனுப்பியிருந்ததும் - அமெரிக்கா புறப்படுவதற்கு முன்னரே அதற்குப் பிரதமர் பதில் அளித்திருந்ததும் தெரிந்தவையே.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வைகோவின் கைதை எதிர்த்து பரவலாகக் கண்டன நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை30

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்தும் -

அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனக்கோரியும் -

நேற்று திங்கட்கிழமை வன்னிப் பெருநிலப்பரப்பிலும், யாழ் குடாநாட்டிலும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, விசுவமடு, மல்லாவி மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன. கிளிநொச்சியில், கிளிநொச்சி மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலடியில் இருந்து முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமானது. இப்பேரணி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தில் ஆயிரக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவைக் கூட்டத்தில் ஒரு சின்ன நடிப்பில் ஈடுபட்டேன்

### அதை காலை, மாலை என்று காட்டுகிறார்கள் என்கிறார் ஜனாதிபதி

பொலன்னறுவையில் நடைபெற்ற எமது கட்சியின் தனிப்பட்ட கூட்டமொன்றில் நான் ஒரு சிறு பகிடிவிட்டேன்; அன்று ஒரு சின்ன நடிப்பில் ஈடுபட்டேன். ரூபவாஹினி பொய்கூறி அங்கு நுழைந்து அதைப்பிடித்து காலை, மாலை, இரவு என்று காண்பிக்கின்றது. இன்று இருக்கும் சுதந்திர ஊடகக்கலை இதுதான்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் அத்தனகலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி தொடர்ந்து கூறியதாவது:-

நான் பாடசாலையில் இருக்கும் பொழுது சிங்கள, ஆங்கில நாடகக் குழுக்கள் இரண்டிலும் இருந்தேன். அவற்றில் ஒவ்வொரு ஆண்டிலும் நடித்திருக்கிறேன். எனக்கு நன்றாக நடிக்கத்தெரியும். இல்லாவிட்டால் இந்த சின்ன நடிப்பைச் செய்யமுடியாதல்லவா?

நாளையோ, மறுநாளோ உலகின் சிறந்த நடிகையாக எனக்குப் பரிசும் கிடைக்கும்.



அந்தப் பேய், பிசாசுகளுக்கு மத்தியில் போய் நாக்கைக் கடித்துக்கொண்டு சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இவ்வாறான ஒரு பகிடியை எமது கட்சியின் தனிப்பட்ட கூட்டத்திலேயே செய்தேன்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.ஜனாதிபதி முஷாரப் நாளை இலங்கை விஜயம்

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் முஷாரப் நாளை இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

வர்த்தக, பிராந்திய பிரச்சினைகள் குறித்து இலங்கைத் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் அவர், சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திடுவார்.

பங்களாதேஷுக்கும் இலங்கைக்குமான விஜயங்களை பாகிஸ்தான் ஜனாதிபதி நேற்றுக் காலை ஆரம்பித்தார். முதலில் அவர் பங்களாதேஷ் விஜயத்தை மேற்கொள்வார். அங்கு இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் அவர், நாளை இலங்கையை வந்தடைவார்.

வர்த்தக, தகவல், சுற்றாடல் துறைகளின் அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலாளர் லெப்.ஜெனரல் ஹமிட் நவாஷ் ஆகியோர் பாகிஸ்தான் ஜனாதிபதியின் குழுவில் அடங்கியிருக்கின்றனர். (ஐ)

## மண்டூரில் பொலீஸ் துப்பாக்கிச் சூடு! பொதுமக்களில் நான்குபேர் காயம்!!

### கசிப்பு பிடிக்கச் சென்றோர் கைதானதால் மக்கள் எதிர்ப்பு

களுவாஞ்சிக்குடி,ஜூலை30

மண்டூரில் பொதுமக்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதில் நால்வர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மண்டூர் 14 ஆம் கொலனியில் சட்ட விரோதமாக கசிப்புத் தயாரிக்கும் கும்பல் ஒன்றைப் பிடிப்பதற்காக அபிவிருத்திக் குழுவினர் சென்றுள்ளனர். ஆனால், அக்குழுவினர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்பொதுமக்கள்மீதே பொலீஸாரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

தியாகராசா குமரன் (வயது 18), எஸ்.வரதன் ஆகியோரே மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய சிரேஷ்ட லீக் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் (28.07.2002) திருகோணமலையில் நடைபெற்றது. இதில் இலங்கை பொலீஸ் அணியை எதிர்த்து இலங்கை கடற்படை அணி போட்டியிட்டது. சம்பியனான இலங்கை கடற்படை அணியினரை படத்தில் காணலாம். *(படம்:திருகோணமலை செய்தியாளர் வினோதமன்)*

## பொதுநலவாய விளையாட்டுவிழா

# பாதைதவறினார் சுசந்திகா பதக்கக் கனவு கலைந்தது!

17 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவின் 200 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க தகுதிநீக்கம் செய்யப்பட்டார்.

200 மீற்றர் இரண்டாவது சுற்றுப் போட்டியில் 6ஆவது ஓட்டப்பாதையில் ஓடிய அவர் இடையில் உட்புற ஓட்டப் பாதைக்கு மாறினார். இதனால் அவர் தகுதியிழந்தவராக அறிவிக்கப்பட்டார். ஞாயிறன்று இப்போட்டி நடைபெற்றது.

முன்னதாக 200 மீற்றர் முதலாம் சுற்றில் குழு 2 இல் ஓடிய அவர் 22.61 செக்கன்களில் ஓடி முதலிடம் பெற்றார். இம்முறை பொதுநலவாய மகளிர் 200 மீற்றர் 2 ஆம் சுற்று வரை எந்தவொரு வீராங்கனையும் இந்த நேரத்திற்குள் ஓடி முடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் 200 மீற்றர் போட்டியில் சுசந்திகா நிச்சயமாக பதக்கம் வெல்லுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த வருடம் சிட்னி ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கம் வென்றவர் சுசந்திகா. அப்போது வெள்ளிப்பதக்கத்தை அவர் நூலிழையால் தவறவிட்டிருந்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் கனடாவில் நடைபெற்ற சர்வதேச மெய்வன்மைப்போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் சுசந்திகா பதக்கம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அப்போட்டியில்பாதை மாறி ஓடியதால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மற்றொரு இலங்கை வீராங்கனையான தமயந்தி தர்ஷா 200 மீற்றர் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். இரண்டாவது சுற்றில் குழு 3 இல் ஓடிய தர்ஷா 23.69 செககன்களில் ஓடி நான்காமிடம் பெற்று அரையிறுதிக்குத் தெரிவானார். இக்குழுவில் ஆஸ்திரேலிய வீர்களாஉ லோரன்ஸ் ஹெவிட் 23.13 செக்கன்களில் ஓடி முதலிடம் பெற்றார்.

# இலங்கை அணிக்கு எதிராக நியூஸிலாந்து புதிய சாதனை

பொதுநலவாய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அணிக்கெதிராக நியூஸிலாந்து அணி புதிய சாதனையொன்றைப் படைத்துள்ளது. ஞாயிறன்று நடைபெற்ற போட்டியொன்றில் குழு 'ஏ' அணிகளான நியூஸிலாந்து, இலங்கை அணிகள் மோதின. இப்போட்டியில் 116-16 விகிதத்தில் வென்றது. பொதுநலவாய வலைப்பந்தாட்டப் போட்டியொன்றில் பெறப்பட்ட ஆகக்கூடுதலான கோல் எண்ணிக்கை இதுவாகும்.

1995 உலகக் கிண்ணப் போட்டியில் நியூஸிலாந்து அணி 121 கோல்களைக் குவித்து உலக சாதனை படைத்தது. இச்சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை ஞாயிறன்று 6 கோல்களால் தவறவிட்டது நியூஸிலாந்து அணி.

குழு 'ஏ' இல் இங்கிலாந்து, கனடா, வேல்ஸ் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. இங்கிலாந்து அணியிடம் 75 - 34 விகிதத்திலும் வேல்ஸ் அணியிடம் 48 - 47 விகிதத்திலும் இலங்கை தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவில் நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகள் முன்னணியில் உள்ளன.

பொதுநலவாய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆசிய கண்டத்திலிருந்து தகுதி பெற்ற ஒரே அணி இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை30

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ். இந்துக் கல்லூரி ஆடு களத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில பெண்கள் பிரிவில் இன்று நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4 மணி - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க.

☆ மாலை 5 மணி - கிராஸ் கொப்பஸ் வி.க. எதிர் யுத்காமல் வி.க. (ம)



இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 170 ஓட்டங்களால் இந்தியாவை வென்றது. இந்த ஆட்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் அஜித் அகாக்கர் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களை 16 பவுண்டரிகள் அடங்கலாக பெற்றுக்கொண்டார். இந்திய வீரர் அஜித் அகாக்கர் துடுப்பெடுத்தாடுவதை படத்தில் காணலாம்.

*ஸ்கோர் விவரம்:* முதல் இன்னிங்ஸ்: இங்கிலாந்து - 487/10, இந்தியா - 221/10, இரண்டாவது இன்னிங்ஸ்: இங்கிலாந்து 301/6, இந்தியா 397/10.





இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்வில் சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் கே.சேகர், அமைச்சர் தி. மகேஸ்வரன், பேராசிரியை ந. விஜயசுந்தரி ஆகியோர் உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படங்கள். *(படம்:நித்தி)*

# முறக்கொட்டாஞ்சேனை பாடசாலை கையளிப்பு மாணவர்கள், பெற்றோர்கள் பகிஷ்கரிப்பு!

## பிள்ளைகள் கல்வியைத் தொடரமாட்டார்கள் என்று அறிவிப்பு

செங்கலடி,ஜூலை30

முறக்கொட்டாஞ்சேனை ஸ்ரீ கிருஷ்ண மிஷன் வித்தியாலயம் நேற்று முற்பகல் கல்வி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆயினும் மாணவர்களோ பெற்றோர்களோ இந்நிகழ்வில் கலந்துகொள்ளாது புறக்கணித்தனர்.

முகாம் ஊடான பாடசாலைக்கான வீதி முற்றாகத் திறக்கப்படவேண்டும். பாடசாலையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் முற்றாக அகற்றப்பட வேண்டும், அதுவரை நாம் பாடசாலையைக் கையேற்க முடியாது. எமது பிள்ளைகளும் கல்வியைத் தொடரமாட்டார்கள் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரி. தங்கவடிவேல், மட்டக்களப்பு போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதியான சி.கே.கணபதிப்பிள்ளை, கல்வி அதிகாரிகள், அரச அதிபர்கள், படையதிகாரிகள் ஆகியோர் பெற்றோரைச் சந்தித்து பேச்சு நடத்தினர். இருபினும் பாடசாலையைக் கையேற்க பெற்றோர் ஒரேயடியாக மறுத்துவிட்டனர்.

இறுதியில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களே நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். தேசியக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினா தங்கவடிவேல் ஏற்றி வைத்தார். அதனையடுத்து பாடசாலைக் கட்டடத்தில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. பின்னர் மட்டக்களப்பு மாவட்ட 23 ஆவது படைக் கட்டளையிடும் அதிகாரி வி.எல்.ஆர். அந்தனிஸ் பாடசாலைக் கட்டடத்தை கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.கணபதிப்பிள்ளையிடம் கையளிக்கும் சான்றுப்பத்திரத்தை வழங்கினார்.

கிழக்கு மாகாண இராணுவ கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்கோன், அரச அதிபர் வே.சண்முகம், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-9)

## புலமைப்பரிசில் சுட்டிலக்கம்

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் சுட்டிலக்கம் பாடசாலைக்கு கிடைத்துள்ளதாகவும் -

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் நாளை புதன்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கும் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாமென அதிபர் க.தம்பிமுத்து அறிவித்துள்ளார். (ஐ-117)

## உரப்பையில் எலும்புக் கூடுகள்

தென்மராட்சி,ஜூலை30

மீளக்குடியமர்வதற்காக வீடு துப்புரவு செய்த போது அறையொன்றில் உரப்பை ஒன்றில் பாதுகாப்பாக மனித எலும்புகள் வைக்கப்பட்டிருந்தது கண்டு வீட்டுக்காரர் அதிர்ச்சியடைந்தார்.

சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

எலும்புக்கூடுகள் தொடர்பாக அருகில் உள்ள படைமுகாமுடன் தொடர்பு கொண்டபோது அவற்றை அப்புறப்படுத்த வேண்டாமென வலியுறுத்தப்பட்டதாகவும் -

இதனையடுத்து ஓர் அறைக்குள் மனித எலும்புக் கூடுகள் கொண்ட உரப்பையை வைத்துப் பூட்டிவிட்டு ஏனைய அறைகளை வீட்டுக்காரர் பயன்படுத்துவதாகவும் அறியவந்தது. (ஐ-117)

## விமான சேவை நேரங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

'எக்ஸ்போ ஏவியேஷன்' நிறுவனத்தின் கொழும்பு - யாழ். இடையேயான விமான சேவைகளின் நேரங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி -

முற்பகல் 10 மணிக்குப் புறப்படும் முதல் விமானத்தில் பயணிப்போர் காலை 6 மணிக்கும் -

மாலை 5 மணிக்குப் புறப்படும் இரண்டாவது விமானத்தில் பயணிப்போர் பிற்பகல் ஒரு மணிக்கும் -

சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

அத்துடன் பயணிகள் நலன் கருதி எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலையும் - 5ஆம் திகதி திங்கட்கிழமை காலையும் மேலதிக விமான சேவைகள் நடைபெறவுள்ளதாக 'எக்ஸ்போ ஏவியேஷன்' நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ)

## பல்கலைக்கழக மோதல் சம்பவம்:

# குற்றப்பத்திரத்தைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பான குற்றப்பத்திரம் பொலீஸாரால் நேற்று யாழ்.நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியமை, அத்துமீறிப் பிரவேசித்தமை, சொத்துக்களுக்கு அழிவு ஏற்படுத்தியமை என்பன தொடர்பாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் சொத்து அழிவின் பெறுமதி குறிப்பிடப்படாமையால் பிரதான குற்றப்பத்திரத்தைத் திருத்தி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி மன்றில் தாக்கல் செய்யுமாறு பொலீஸாருக்கு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

சொத்து அழிவு தொடர்பாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில சொத்து அழிவின் மதிப்பீடு ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 414 ரூபா 25 சதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் மேற்படி விடயம் தொடர்பாகப் பொலீஸார் இணங்கிச் செல்ல விரும்பும் பட்சத்தில் மன்றின் அனுமதியுடன் தாமும் இணங்கிச் செல்லத் தயாராக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மாணவர்களால் தாக்கிச் சேதமாக்கப்பட்ட தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளரின் தாயாரும் நேற்று மன்றில் ஆஜராகி இணங்கிச் செல்லச் சம்மதம் தெரிவித்தார்.

ஆயினும் பொலீஸார் தாக்கல் செய்தது குற்றவியல் வழக்கு. அந்த வழக்கை வாபஸ் பெறும் உரிமை முறைப்பாட்டுக்காரருக்குக் கிடையாது. குற்றவியல் குற்றம் தனிநபருக்கு எதிராக அல்ல சமுதாயத்திற்கு எதிரான குற்றமாகக் கணிக்கப்படுவதால் குடியியல் வழக்கில் வழக்காளி வழக்கை வாபஸ் பெறுவது போல முறைப்பாட்டுக்காரர் வழக்கை வாபஸ் பெறமுடியாது.

இந்த வழக்கைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட சொத்து அழிவு அரச உடைமையைச் சேதமாக்கிய குற்றச்சாட்டாகக் காணப்படுவதால் முறைப்பாட்டுக்காரர் விரும்பினாலும் மன்றுக்கு இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கு அனுமதி வழங்க அதிகாரம் இல்லை என்று மன்றினால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு துணைவேந்தர் ஊடாக அழைப்பாணை அனுப்புமாறு மன்றினால் பொலீஸாருக்கு பணிப்பு விடுக்கப்பட்டது. (ஐ-10)

## கடன்தொகைக்கு வட்டி விலக்கு

தென்மராட்சி,ஜூலை30

சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தில் இடம்பெயர்வுக்கு முன்னர் அங்கத்தவர்களால் பெறப்பட்ட கடன்களுக்கு கடந்த 2000 ஆம் ஆண்டு மேமாதம் 21ஆம் திகதி தொடக்கம் 2002ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு வட்டி அறவிடுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்கள் தாம் பெற்ற கடன தொகையை எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு சங்கச செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## தவறவிட்ட டிஜிற்றல் டயறி

யாழ்.மருத்துவபீடத்துக்கு அண்மையில் 'டிஜிற்றல் டயறி' ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி, பிறவுண் வீதிச் சந்தியில் உள்ள மின்சார சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு மின்சார சபை அதிகாரி எஸ். ரி. கணநாதன் கேட்டுள்ளார்.(ஐ-9)

# அரசியலுக்கு வருவார் சூப்பர் ஸ்ரார் ரஜனி!

## கோலாலம்பூரில் அவரே தெரிவிப்பு



கோலாலம்பூர்,ஜூலை30

"திரைப்படத் துறையில் இதுவரை அடைந்துள்ள வெற்றி குறித்து நான் மனநிறைவு கொள்கிறேன். தொடர்ந்து வேறு சில துறைகளில் ஈடுபாடு காட்ட எண்ணியுள்ளேன். அது அரசியலாகக் கூட இருக்கலாம். அதனை ஆண்டவன் தான் முடிவு செய்வான்" - என்று தெரிவித்தார் தமிழக நடிகர் ரஜனிகாந்த்.

மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியின்போது உரையாற்றிய ரஜனிகாந் இதனைத் தெரிவித்தார். தமிழக நடிகர் நடிகைகளில் பெரும்பாலானவர்கள் இந்தக் கலை நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

திரைப்படத் துறையில் நான் கனவு கண்டிராத வெற்றிகளையும் சாதனைகளையும் செய்துள்ளேன் என்பதில் மன நிறைவு கொள்கிறேன்.

தற்பொழுது வேறு துறைகளில் ஈடுபாடுகாட்ட விரும்புகிறேன். அது அரசியல் என முடிவு செய்து விடாதீர்கள். அது அரசியலாகக் கூட இருககலாம். அதனையும் மறுப்பதற்கில்லை. எல்லாவற்றையும் ஆண்டவன் தான் முடிவு செய்வான்.

நான் ஒரு வில்லனாக அறிமுகமானேன். வில்லனாகவே எனது வாழ்க்கை தொடரும் என நினைத்தேன். ஒரு புள்ளியில் எனது வாழ்க்கை மாறியது.

சினிமாத் துறையில் ஈடுபடுவதற்கு முன் பல சிரமங்களை அனுபவித்தேன். அந்த சிரமங்களைக் கடந்து வந்தேன். அப்பொழுது தியானம் எனக்கு எளிதானதாகத் தோன்றியது. ஆனால், அதற்குள் நுழைந்த பின்னர்தான் சினிமாவைவிட அது சிரமம் என்பதை உணர்கிறேன்.

எந்த சமயத்தினராக இருந்தாலும் தியானம் செய்யுங்கள். குறிப்பாக இளைஞர்கள் இளம் பராயத்திலேயே தியானத்தில் ஈடுபடுங்கள். மூன்று மாதத்திலேயே உங்கள் வாழ்க்கைப் பயணம் மாறி விடக்கூடும்.

எனக்கு எப்பொழுதும் வாழ்க்கையில் சிரமப்பட்டு மேலே வருவதுதான் பிடிக்கும். சினிமாத் துறைக்கு வராமல் இருந்திருந்தால் பஸ் கண்டக்டராக வாழ்க்கைப் பயணம் தொடர்ந்திருக்கும். ஒரு வேளை, பஸ் போக்குவரத்து அதிகாரியாக இருந்திருப்பேன். ஆனால், ஒன்றைச் சொல்கிறேன். இப்போதைய வாழ்க்கையைவிட அந்த வாழ்க்கையில் மிகுந்த சந்தோஷத்தோடு இருந்திருப்பேன் - என்றார். (ம)

## சிம்பாப்வேயில் பெரும் மனித அவலம்

# பட்டினியால் வாடுபவர்களுக்கு உணவு உதவி செல்லத் தடை!

## முகாபே அரசின் ஆதரவாளர்கள் அட்டூழியம்

ஹராரே,ஜூலை30

சிம்பாப்வேயில் பட்டினியால் வாடும பொதுமக்களுக்கு உணவு உதவிகள் சென்று சேர்வதை அதிபர் ரெபேர்ட் முகாபேயின் ஆதரவாளர்கள் தடுத்து நிறுத்தி வருவதாக உலக உதவி அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதனால் பல லட்சக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்புகள் குறை கூறியுள்ளன.

கடந்த மார்ச் மாதத்தில் இடம் பெற்ற அதிபர் தேர்தலில் முகாபேக்கு எதிராக வாக்களித்தவர்கள் அதிகம் வாழும் கிராமங்களுக்கு உணவு உதவிகள் செல்வதை முகாபேயின் ஆதரவாளர்கள் தடுத்துவிட்டனர். உதவி கிடைக்காத மக்களுக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தனியாரிடம் இருந்து தானியங்களை வாங்குவதையும் அவர்கள் தடுத்துள்ளனர்.

பல கிராமங்களில் உதவிகள் வரும் நேரத்தை எதிர்பார்த்து பல நாள்களாக வீதியோரங்களில் மக்கள் காத்துநிற்கின்றனர்.

ஏர்பன் பகுதியில் வசிக்கும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஒரு நேர உணவை மட்டுமே உண்கின்றனர் என்கின்றன உதவி அமைப்புகள்.



உணவு உதவியை எதிர்பார்த்து வீதியோரத்தில் காத்திருக்கும் மக்கள்

பட்டினியை எதிர்நோக்கும் குடும்பங்களில் பல கிராமப் புற வாழ்வில் இருந்து விலகி மீண்டும் காட்டு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

இவர்களுக்கெல்லாம் உதவிப் பொருள்கள் கிடைக்கும் சாத்தியங்கள் இருந்துங்கூட அரச ஆதரவாளர்கள் தடுத்துவருவதால் அது சாத்தியமாகாமலே போகின்றது.

வடமேற்கு மாகாணமான நகரமான பிங்கா ஆஸ்பத்திரி வட்டாரங்களின் தகவல்படி வாராந்தம் 30 சிறுவர்கள் போஷாக்கின்மையால் உயிரிழந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பட்டினியைத் தாங்க முடியாத பலா, நஞ்சை அருந்தித் தற்கொலை செய்து கொள்வதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

துன்பப்படும் மக்களுக்கான உதவிகளை வழங்கும் ஒவ்வொரு கட்டத்திலும் முகாபே அரசு தலையிடுகிறது என்று உதவி அமைப்புகள் குற்றஞ் சாட்டுகின்றன.

அரசின் இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் லட்சக்கணக்கானவர்களின் பட்டினிச்சாவைத் தடுக்க முடியாது என்றும் அவை தெரிவித்துள்ளன. (ம)

# விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் மொஸ்கோவில் 14பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ,ஜூலை30

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியதில் 14பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உக்ரெய்னில் வானில் சாகசம் நிகழ்த்திய விமானம் மக்களிடையே வீழ்ந்து நொறுங்கியதில் 83பேர் உயிரிழந்த சம்பவம் நிகழ்ந்த மறுதினமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மொஸ்கோவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விமான நிலையத்தில் இருந்து 700 மீற்றர் தூரத்தில், காட்டுப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது.

350 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய இந்த விமானம் விபத்துக்குள்ளான போது அதில் விமானிகள் மற்றும் சிப்பந்திகள் எனப் 16பேர் மட்டுமே இருந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களின் பாகங்கள் விபத்து நடந்த இடமெங்கும் சிதறிக் காணப்பட்டன.

விமானத்தின் சிதைபாடுகளில் இருந்து இரு பெண் சிப்பந்திகள் மட்டும் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டனர். உடனடியாக அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து விமானத்தின் இரு கறுப்புப் பெட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன என்று ரஷ்ய ஊடகத் திணைக்களம் தெரிவித்தது. விபத்துக்கான காரணங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

"விமான நிலையத்தை விட்டு விமானம் புறப்பட்டபோது எந்த விமான பிரச்சினைகளும் இருக்கவில்லை. ஆனால், விமானம் 200 மீற்றர் தூரம் பறந்திருக்கும்; திடீரென தீப்பற்றியதாகித் தரையை நோக்கி வீழ்ந்தது" - என்று தெரிவித்தார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர்.

மொஸ்கோவுக்கும் சென்பீற்றர்ஸ பேர்க் நகருக்கும் இடையிலான உள்ளூர் சேவையில் ஈடுபடும் இல்யுஷின் ஐ எல் - 86 ரக விமானமே விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. நான்கு இயந்திரங்களையும் அகலமான உடலமைப்பையும் கொண்ட இந்த விமானம் உள்ளூர் சேவையில் புகழ்பெற்றது. இது விபத்துக்குள்ளானதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ம)



எரிந்துகொண்டிருக்கும் விமானத்தின் பாகங்களை அணைக்கும் முயற்சியில் மீட்புப் பணியாளர்கள்.

# இந்தோனேசிய கடற்பரப்பு கொள்ளையர் சொர்க்கபூமி!

லண்டன்,ஜூலை30

சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்கு இந்தோனேஷியக் கடற்பரப்பு அபாயகரமானது என உலகக் கடற் கண்காணிப்பு அமைப்பு தெரிவிக்கிறது. அப்பகுதி கடற்கொள்ளையர்களின் சொர்க்கபூமி என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இடம்பெற்றுள்ள 171 கடற் கொள்ளைச் சம்பவங்களில் 44 சம்பவங்கள் இந்தோனேஷியக் கடல் பரப்பிலும் 9 சம்பவங்கள் மலாக்கா நீரிணைப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளதாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆயுதம் தரித்த கடற்கொள்ளைக்காரர்கள் வேகமான படகுகளில் வந்து துப்பாகிகளைப் பயன்படுத்தி கப்பல்களைக் கொள்ளையடிக்கின்றனர் அல்லது அவற்றைக் கடத்திச் செல்கின்றனர்.

2001ஆம் ஆண்டிலும் பார்க்க இவ்வருடம் தாக்குதல் சம்பவங்கள் 3.6 சத வீதத்தால், அதிகரித்துள்ளன. 2002ஆம் ஆண்டின் முதல் ஆறுமாத காலப் பகுதியில் உலகளாவிய ரீதியில் கடற்கொள்ளைச் சம்வங்களில் கப்பல் பணியாளர்கள் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 4 பேர் இந்தோனேஷியக் கடற்பரப்பில் கொல்லப்பட்டுள்ளனர்.

கப்பல்களிலுள்ள சரக்குகள் மற்றும் பணியாளர்களின் உடைமைகளே கொள்ளை அடிக்கப்படுகின்றன.

2002 ஜனவரி முதல் ஜூன்வரை 44 கப்பல்கள் கடத்தப்பட்டு, அவைகளையும் பணியாளர்களையும் விடுவிப்பதற்கு பணம் கப்பமாக கப்பல் உரிமையாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது. இது 2001ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் நடந்தவற்றிலும்விட அதிகமாகும் எனத் தெரிகிறது - என்றுள்ளது. (ஓ)

## உக்ரெய்னில் துக்கதினம்

உக்ரெய்னில் சாகசம் காட்டிய விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த 83 பேரதும் நினைவாக அங்கு நேற்றுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.


ஜனாதிபதி லியோனிட் குச்மா இந்தத் துக்க தினத்தைப் பிரகடனம் செய்திருந்தார்.

இந்த விபத்துத் தொடர்பாக விமானப்படையின் உயர்திகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# ஹெப்ரோனில் கலவரம் 14 வயதுச் சிறுமி பலி!

ஜெருசலேம்,ஜூலை30

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலிய குடியேற்றக்காரர்களுக்கும் இடையில் கலவரம் இடம்பெற்றுள்ளது. இதில் சிக்கி 14 வயது பலஸ்தீனச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தாள்; பலர் காயமடைந்தனர்.



கல்லெறியும் பலஸ்தீனர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் இஸ்ரேலியக் குடியேற்றக்காரர்.

கடந்த வெள்ளியன்று பலஸ்தீன ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேலியச் சிப்பாயின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த இஸ்ரேலியர்கள்மீது பலஸ்தீனர்கள் கற்களை வீசித்தாக்கியதையடுத்து இந்தக் கலவரம் மூண்டது.

தம்மைநோக்கி கற்கள் வீசப்பட்டதை அடுத்து இஸ்ரேலியக் குடியேற்றக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இடையில் அகப்பட்டு நிஸின் ஜம்ஜூன் என்ற சிறுமி உயிரிழந்தார் என்று இஸ்ரேலியப் படைத்தரப்புக் கூறியது.

இந்தச் சம்பவத்தில் இஸ்ரேலியப் பொலீஸார் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# சட்ட ஆலோசனைக்கு செலவுசெய்த பணத்தைத் திருப்பிக்கொடுங்கள்

## மாகாண அரசிடம் கிளின்ரன் கோரிக்கை

வாஷிங்ரன்,ஜூலை30

ஆர்கான்சாஸ் நில முதலீட்டுத் திட்டம் தொடர்பாக அமெரிக்க முன்னாள் அதிபர் கிளின்ரன், அவரது மனைவி ஹிலாரி இருவர் மீதும் மாகாண அரசு சார்பில் வழக்கு நடந்து வந்தது.

இந்த் விவகாரத்தில் கிளின்ரனும், ஹிலாரியும் தவறாக எதுவும் நடந்து கொள்ளவில்லை என்று தெரியவந்தது. இதனால் வழக்கில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நடந்தபோது கணவன் - மனைவி இருவரும் சட்ட ஆலோசனைக்காக பல கோடி ரூபாய் செலவு செய்துள்ளனர். இந்தப் பணத்தை தங்களுக்குத் திருப்பித் தரவேண்டும் என்று ஆர்கான்சாஸ் மாகாண அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்தத் தகவலை இவர்களது வழக்கறிஞர் டேவிட் கென்டல் தெரிவித்தார். எவ்வளவு செலவுத் தொகையை இருவரும் கோரியுள்ளனர் என்பதை அவர் கூறிவில்லை. ஆனால், ஏ.பி.சி.டெலிவிஷன் நிறுவனம் சுமார் 250 கோடிரூபாய் கேட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேபோன்று, அமெரிக்க முன்னாள் அதிபர்களான றொனால்ட் றீகனும், ஜோர்ஜ் புஷ்சும் முன்பு சட்ட ஆலோசனை செலவுத் தொகையை நீதிமன்றம் மூலம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தலைவராக பெனாசீர் தெரிவு

இஸ்லாமாபாத்,ஜூலை30

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவராகத் தற்போது சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் முன்னாள் பிரதமர் பெனாசீபூட்டோ தெரிவு செயயப்பட்டுள்ளார்.

உலக அரங்கில்

பெனாசீரின் மக்கள் கட்சிக்கும் உட்கட்சித் தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித்தினம் நேற்று முன்தினமாகும். கட்சித் தலைமைப் பதவிக்கு பெனாசீரைத் தவிர வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால் அவர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

நல்ல இன (WATCH DOG) அல்சேசன் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி பாலச்சந்திரன், 'டான் போத் இல்லம்', டச்றோட், உடுவில். (6496)

புதிய NOKIA HAND PHONE மற்றும் போட்டோஸ்ரற் பேப்பர் 125m ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குமார், கொக்குவில் சந்தி. T.P.:No. 2961 (6490)

PIONER AUDIO DECK, PIONER (DECK SET), WALKMAN C.D PLAYER, IBM COMPUTER (PENTUM I) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.நிசாந்தன், 18/5, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (6480)

நல்ல இன யமுனாபாரி ஆடு குட்டி ஈனும் நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.குமாரசாமி, 17/1, புகையிரத வீதி (கச்சேரியடி), சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (6478)

பகிறபாம் No.1 புறொயிலர்க் குஞ்சுகள் இன்று (30-07-2002) செவ்வாய்க்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்தவர்கள் மாலை 6மணிக்கு முன் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(6494)

## வீடு விற்பனைக்கு

இல.39, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 2 பரப்புக் காணி கிணறு, வான் பயிருடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: சி.யோகராசா, ஆவரங்கால் சந்தி. தொலைபேசி இல.070-212665. (6463)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (6471)

## தவறிவிட்டது

பூநகரி, செம்மங்குண்டைச் சேர்ந்த கயேந்திரராஜா சிவபதி என்பவரின் கைச்சங்கிலி 10.07.2002 புதன்கிழமை யாழ்.பஸ் நிலையத்திற்கும் ஆனைக்கோட்டை சந்திக்குமிடையில் பஸ்ஸினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "திருத்தணி" நவாலி றோட், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6500)


# சர்வதேச சனத்தொகையில் 25 சதவீதத்தினர் அகதிகள்

இன்றைய காலவோட்டத்தில் சர்வதேசம் எல்லாம் தொனிக்கும் ஒரே வார்த்தை 'அகதிகள்' என்பதாகும்.

இன்றைய நிலையில் சர்வதேச சனத்தொகையில் 25 சதவீதத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக உள்ளனர் என அறிக்கைகளிலிருந்து அறிய முடிகிறது. இவ்விகிதம் அதிகரித்துச் செல்லுமேதவிர குறைவடையாது என்பது திண்ணம்.

அகதிமுகாம்களில் வாழும் அகதிகளின் வாழ்வியல் கஷ்டம், சுகாதாரம், கல்வி, போஷாக்கு, பொருளாதார குறைபாடுகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு இவ்வசதி வாழ்க்கைக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும், பொது வசதிகள் மறுசீரமைக்கப்படவேண்டும் என்ற நோக்கில் 1951ஆம் ஆண்டு உலக அகதிகள் தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. ஜுலை 28ஆம் திகதியே அந்த நாளாகும்.

இலங்கைத் திருநாட்டில் சமாதானச் சூழ்நிலை முளைவிடும் இத்தருணத்தில - தமிழினம் தனக்கான சுயகௌரவத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடியது. அதனையன்று பயங்கரவாதம் என்று சாயம் பூசி, தடைசெய்யப்பட்ட இயக்கமாகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளினைப் பிரகடனப்படுத்தித் தமிழ்மக்களினை வீணான சோதனைகளுக்கும், அவதிகளுக்கும், பாரிய உயிரிழப்புகளுக்கும நேரே இட்டுச் சென்றது.

இலங்கை நாட்டில் சமாதானத்துக்கான நடவடிக்கை என்னும் தொனியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையிலான சென்ற அரசு டைக்கில் யுத்தத்தினையே மேற்கொண்டது. சாப்பாட்டு பார்சல்களை ஆகாயத்திலிருந்து போடுவதுபோல் பாரிய சேதத்தினை ஏற்படுத்தக்கூடிய குண்டு மழையைப் பொலிந்தது.

அப்பாவி தமிழ் இளைஞர்களினைக் கொன்று குவித்தது. அகதிகளாய் மதஸ்தானங்களில் தஞ்சமடைந்தோரின் மீது குண்டுகள் போட்டுத் தீர்க்கப்பட்டன. மானத்தோடும்

## அவர்கள் துயரங்கள் தீர்வது எப்போது?

கௌரவத்தோடும் அச்சத்துக்கு மத்தியில் வாழ்ந்த தமிழப் பெண்மணிகளின் வாழ்க்கையிலும் அரச படைகள் அன்று கைவைத்தது வரலாறாகும்.

இந்நிலைமைகள் தொடர்ந்ததனால் தமது உயிரை மாத்திரமாவது காப்பாற்றவேண்டும் என்ற வேட்கையுடன் தமிழினமே இன்று சர்வதேச நாடுகளில் அகதிகள் என்ற அந்தஸ்தைப் பெற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றது.

இவர்கள் படும் இன்னல்கள், துயரங்கள், அவல நிலைகள் பற்றி இடம்பெயர்ந்தோரிடம் இருந்துவரும் இலக்கியப் படைப்பாக்கங்கள் மூலம் தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளைப் பிரபாகரனும் இலங்கையின் தார்மீக அரசின் பிரதமரும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையினை அடுத்து இலங்கையில் சுமுக சூழ்நிலை துளிர் விட்டுக்கொண்டிருக்கின்றது.

சர்வதேசமெல்லாம் பரந்து கிடக்கும் தமிழ் இனத்தின் அகதிவாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் அண்மித்துள்ளது என்று கூறலாம்.

இது ஒரு நல்ல சகுனமே. அகதிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் காலமும் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், தலைநிமிர்ந்து வாழும் காலம் அண்மித்துவிட்டது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள அரசு - விடுதலைப் புலிகளுக்கிடையிலான பேச்சின்போது - நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்று அகதி வாழ்க்கையில் அல்லலுறும் தமிழ், முஸ்லிம் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அகதிகள் என்ற காற்றைவிட்டு புதிய சுவாசக் காற்றை நுகர இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் உறுதி பூணுவோம். (நன்றி சுடரொளி)

# முல்லை மாவட்ட பட்டதாரிகள் ஆசிரிய நியமனத்தில் புறக்கணிப்பு

## மாகாணக் கல்விச் செயலாளரிடம் முறைப்பாடு

வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் புறந்தள்ளப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி, அங்குள்ள பட்டதாரிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் வடக்கு - கிழக்கு மாகாணக கல்வி அமைச்சின் செயலாளரைக் கடிதம்மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த ஒன்றியத்தின் தலைவரும் செயலாளரும் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாம் யுத்த அனர்த்தங்கள், பொருளாதாரப் பின்னடைவுகள், இடப்பெயர்வுகள் போன்ற யுத்தகால இன்னல்களுக்கு மத்தியில் மரநிழல்களுக்குக் கீழ் போதிய ஆசிரியர்களின்றி கல்விகற்று, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி, போக்குவரத்துச் சீரின்மையால் வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் மாதக் கணக்காகக் காத்து கிடந்து, பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து எமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளமை தாங்கள் நேரடியாக அவதானித்து அறிந்துள்ள விடயமாகும்.

இத்தகைய பட்டதாரிகள் பலர் இந்த வருடம் ஜுலை 15ஆம் திகதி வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனத்திலிருந்து புறந்தள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்போது வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் நியமனம் கடந்த கால நடைமுறைகளுக்கு மாறாக சனத்தொகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை எமது மாவட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. அண்மைய ஆண்டுகள் தொடர்பான முறையான புள்ளி விவரங்கள் இல்லாதிருப்பது இதற்கு முக்கிய காரணமாகும். ஆயினும், ஆசிரிய நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் சனத்தொகை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளில் 19பேர் மட்டுமே எமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். எமது மாவட்டத்தை தமது நியமனத்திற்குரிய மாவட்டமாகத் தெரிவு செய்யாத பிறமாவட்ட பட்டதாரிகள் கூட எமது மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளார்கள். இதனால் எமது மாவட்டம் முழுமையாகப் புறக்கணிககப்பட்டு எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகள் பாதிக்கப்படலாம் என அஞ்சுகின்றோம்.

பிற மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் எமது மாவட்டத்தில் நியமிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கடந்த காலங்களில் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற செயற்பாடுகள் தொடர்வதற்கு இவ்வாறான நியமன நடவடிக்கைகள் இடமளிக்கின்றன. இதனால் இங்கு ஆசிரியர் பற்றாக்குறை மேலும் மோசமாகி மாணவர்கள் பாதிப்படைவதற்கு வழி வகுக்கும். எனவே, இதுவிடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ)

# பொ.ஐ.மு.ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி. பங்கேற்காதாம்

கொழும்பு,ஜுலை30

விலைவாசி ஏற்றம், தனியார்மயமாக்கல் ஆகியவற்றுக்கு எதிர்புத் தெரிவித்து பொதுசன ஐக்கிய முன்னணி அடுத்தமாதம் 12ஆம் திகதி கொழும்பில் நடத்தவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றப் போவதில்லை என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியும் பங்குபற்றும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் நடத்தப்படவேண்டும் என்ற ஜே.வி.பியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாலேயே இதில் பங்குபற்றப் போவதில்லை என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இதேவேளை -

சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

# விகாரையில் பிக்கு கொலை!

கிறந்திவெல என்னுமிடத்திலுள்ள விகாரையில் வசிக்கும் புத்தகுரு ஒருவர் அதே ஆலயத்தில் வசித்து வந்த இன்னொரு புத்தபிக்குவைக் கொலை செய்துள்ளார். கொலை செய்வதற்கு ஒரு கூரிய கருவி பாவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொலை செய்யப்பட்ட புத்தகுரு அந்த விகாரையில் நிரந்தரமாக வசிப்பவரல்லர் எனவும் -

அவர், கொலை செய்த புத்தகுருவிற்கு பெருங் கோபத்தினை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டதே இக கொலைக்குக் காரணம் என்றும் - கூறப்படுகிறது.

# வீதி விபத்தில் சிறுவன் காயம்!

நெல்லியடி-பருத்தித்துறை வீதியில கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் 8 வயதுச சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வை.சரண்ராஜ் (வயது 8) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான்.

படுகாயமடைந்தவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஒ-15)


சைன் உடுவில்

A/L 2003

அளவையியல்

பகுதி II

S.சயந்தன்

புதன் 4.00 மணி

(6498)


# வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தோர் ஆலயத்தின் யாகசாலைப் பகுதியில் இருந்து வெடிக்காத நிலையிலுள்ள ஷெல் ஒன்றை மீட்டுள்ளனர். யாகசாலைப் புனரமைப்புக்காக நிலத்தைத் தோண்டிய போதே புதையுண்டு இருந்த ஷெல் மீட்கப்பட்டது. (ஒ-72)

# புலிகளின் இசை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகளின் இசைக் குழுவினர் ஏற்பாடுசெய்த இசை நிகழ்வு ஒன்று கடந்த சனியன்று ஊர்காவற்றுறை பொதுநூலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

இசை நிகழ்வின் தொடக்கத்தில் ஊர்காவற்றுறை பிரதேச மாவீரர்களான 2ஆம் லெப்.அகர்த்தனா, முதலாம் லெப்.வனஜா, 2ஆம் லெப்.அனோஜா ஆகியோரின் பெற்றோர்கள் ஈகைச் சுடரேற்றினர்.

தொடர்ந்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான பாப்பா, நிரோஜன் 'புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தீவக நிலைமை' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினர். இறுதியில் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. (எ)

# முரண்பட்ட அறிக்கைகள்

கொழும்பு,ஜுலை30

விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பாக இரண்டு முரண்பட்ட தகவல் அறிக்கைகளை விடுத்துள்ளதாக நுவரெலியா பொலீஸார் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது தகவல் அறிக்கையின் பிரகாரம் நுவரெலியா வைத்தியசாலையைச் சேர்ந்த சாரதி ஒருவர் இந்த விபத்துக்குக் காரணமாக இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டதனால், வாஸ் குணவர்த்தன என்ற இந்தச் சாரதியை சுகாதார அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளனர்.

இருந்தபோதிலும், இரண்டாவது அறிக்கையின்படி இந்தக் குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தும்படி மத்திய மாகாண சுகாதார சேவைகள் சங்கம் பொலீஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-8)

# கைப்பை குறித்து விசாரணை!

கொழும்பு, ஜுலை30

ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் ரி.வி.சுபலசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதி வசமுள்ளதாகக் கூறப்படும் அதிநவீன கைப்பை சம்பந்தமாகவே இந்த விசாரணை நடைபெற்றது.

ஜனாதிபதியின் கைப்பையில் விஷேட ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு சாதனங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக தேசிய உளவுப் பிரிவினரிடமிருந்தும் சி.ஐ.டி. அதிகாரிகள் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர். (ஒ-8)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 12 - 1957



அழிப்பு 02 - 08 - 1999

அமரர்

## மார்க்கண்டு லோகேஸ்வரன்

*(இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர், உரிமையாளர், அஜந்தா போட்டோ, வீடியோ, நல்லூர் அரிமாக் கழக உறுப்பினர், சமூக முன்னேற்றக் கழகங்களின் பிராந்தியச் செயலாளர்)*

திதி: 30.07.2002

எழிலின் பிறப்பிடமே - எங்கள்
அன்பின் உறைவிடமே!
உழைப்பே உங்கள் இலட்சியமாய் - அவனியில்
எம்மை எழிலுடன் வாழ வைத்தீரே!
நீதி காப்பவரே - கயவர்கள்
வஞ்சப் பேச்சைக்கேட்டு
எம் குல விளக்கை அணைத்த
நியாயம் தான் என்ன? - பதில்
சொல்வார் யார்?

*63, சங்கிலியன் வீதி, நல்லூர்.*

அன்பு மனைவி, பிள்ளைகள், மாமன், சகோதர சகோதரிகள், மைத்துன மைத்துனிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(6469)

உதயன்

## ஜனாதிபதியின் நடிப்பு!

தெற்கு அரசியல் வானில் இன்று சூடு பிடித்திருக்கும் விவகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி - அரசு இடையிலான மோதல்தான்.

இந்த மோதலில் உச்சக்கட்டமாக ஜனாதிபதி மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சரவையின் அனுமதியின்றி சுமார் இருநூற்று அறுபது கோடி ரூபாவுக்கு ஜனாதிபதியின் செயலகத்துக்கு உயர்ரக வாகனங்களைக் கொள்வனவு செய்தமை, ஒவ்வொன்றும் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய உளவுக் கருவிகள் அடங்கிய கைப்பை இரண்டு கொள்வனவு என்று ஊழல் பட்டியல் நீளுகின்றது.

மிக நவீன ஒளிப்பதிவுக் கமரா, ஒலிப்பதிவு சாதனங்கள் ஆகியவை அடங்கிய - உளவு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் - கைப்பை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அது ஜனாதிபதியின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவைக் கூட்டத்துக்குக்கூட - பிரதமருக்கோ ஏனைய அமைச்சர்களுக்கோ தெரியப்படுத்தாமல் - அதை ஜனாதிபதி எடுத்து வந்துள்ளார் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அமைச்சரவை இரகசியங்கள் பேணப்படுவது நாட்டின் இறைமையில் முக்கியவிடயமாகும். ஜனாதிபதி, அமைச்சர்கள் அனைவரும் இரகசியக் காப்பு சத்தியப்பிரமாணம் செய்தே பதவியேற்கின்றார்கள்.

அத்தகைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஏனையோருக்குத் தெரியாமல் அதிசக்தி வாய்ந்த - மிக நவீனரக - உளவுக் கருவிகள் அடங்கிய கைப்பையை எடுத்துவருவது என்பது நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் ஜனநாயகத்துக்கும் விடுக்கப்பட்ட பெரும் சவாலாகும். பாரதூரமான இந்தக் குற்றச்சாட்டு அரசியல் மேடைகளில் சேறு வாரியிறைக்கும் 'ஜோக்' விவகாரமல்ல.

இத்தகைய குற்றச்சாட்டு உண்மையானால் மிகவும் தீவிரத்தோடு நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயமாகிறது அது.

அந்தக் கேள்விக்குப் பதிலேதும் அளிக்காமல் வேறு ஏதோவெல்லாம் பேசுகின்றார் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி.

நாட்டின் தலைவர், முப்படைகளின் தளபதி, நாட்டின் முதல் பிரஜை என்ற அதியுச்ச மரியாதைக்குரிய நிலையில் இருப்பவர் ஜனாதிபதி. பல நூற்றுக்கணக்கானோர் திரண்டிருக்கும் ஒரு நிகழ்வில் அவர் பேசியது, அமைச்சர்களின் அங்கலட்சணங்களை விமர்சித்து, நடித்துக்காட்டி, "மிமிக்கிரி" செய்ததெல்லாம் மக்களை - படித்த சமூகத்தை - அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

அதற்கு ஒரு வருத்தம் தெரிவித்து முற்றுப்புள்ளி வைப்பதை விடுத்து, "நான் ஒரு சிறந்த நடிகை. அன்று சிறிய நடிப்பை நடித்துக் காட்டினேன்" - என்றெல்லாம் தனது அசிங்கமான நடவடிக்கையை அவர் தொடர்ந்து நியாயப்படுத்த முயல்வது அவரது பதவிக்கு அழகானதல்ல; ஏற்றுக்கொள்ளக்கூடியதுமல்ல.

வாகனக் கொள்வனவு குறித்து அமைச்சரவை உபகுழு நடத்தும் விசாரணைக்கு தகுந்த பதில் - ஒத்துழைப்பு - ஜனாதிபதி தரப்பில் இருந்து வரவில்லை.

அதேபோன்று, உளவுக் கருவிகள் அடங்கிய கைப்பை கொள்வனவு, அதை அமைச்சரவைக்கு எடுத்து வந்தமை ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து தெளிவான பதிலேதும் இல்லை. அதைவிடுத்து, தான் அமைச்சரவைக்கு வெடிகுண்டு எடுத்துவருவதாக இன்னொரு அமைச்சர் குற்றஞ்சாட்டினார் என்று அந்த அமைச்சர், பிரதமர் உட்பட ஏனைய அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குரலில் மறுக்கும் ஒரு விடயத்தைத் திருப்பித் திருப்பிப் பேசி திசை திருப்ப முயல்கின்றார் ஜனாதிபதி.

உளவுக் கருவியைக் கொண்ட கைப்பையை அமைச்சரவைக்கு ஜனாதிபதி கொண்டு வந்தது தான் வெடிகுண்டு போன்ற அதிர்ச்சித் தகவல்.

இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லாமல் - பதில் தரவேண்டிய கடப்பாடு இருந்தும் தராமல் - விடயத்தைத் திசை திருப்பிக்கொண்டு 'நான் நல்ல நடிகை' என்று ஜனாதிபதி பீற்றிக்கொண்டிருந்தால் அரசியலிலும் அவர் நன்றாக நடிக்கின்றார் என்று கருதுவதைத் தவிர மக்களுக்கு வேறு என்ன வழியுண்டு?

# பாதுகாப்பு, புலனாய்வுத்துறைகளில் இலங்கைக்கு அமெரிக்கா உதவும்!

## நாடு திரும்பிய பிரதமர் மக்களுக்கு அறிவிப்பு

கொழும்பு,ஜுலை30

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அத்துறைகளைக் கட்டி எழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்தத் துறைகளில் தாம் இலங்கைக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து ஆராய்வதற்கும் பிரதிநிதிகள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இணங்கியிருப்பதாக அவர் சொன்னார்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

நாட்டின் வர்த்தகத்துறையை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் இலங்கையுடன் இணைந்து செயற்படவும் அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலத்தில் எமது அரசு பதவியேற்ற பின்னர் இந்தியா, சிங்கப்பூர், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுடன் நல்லுறவை வளர்க்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதி விரைவில் கொழும்பு வருகின்றார். அமைச்சர் கரு ஜெயசூரிய எனது பிரதிநிதியாக சீனா சென்றுள்ளார்.

இவ்வாறு சர்வதேசச் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம், சர்வதேச ஒத்துழைப்பு என்ற பாதுகாப்பு வலை எமது நாட்டுக்குக் கிட்டுகின்றது.

- இப்படி பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (ஒ)

## தொழில்துறைக்கு சமாந்தரமாக சமாதானத்தை முன்னேற்றவேண்டும்!

### வர்த்தக சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு,ஜுலை30

தொழில்துறையை இந்த நாட்டில் முன்னேற்றுவதுடன் அடுத்த நடவடிக்கை, அரசு ஆரம்பித்திருக்கும் சமாதான முயற்சிக்கு முழுமையான பங்களிப்பை நல்குவதாகும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய சம்மேளனத்தின் புதிய தலைவர் திலக் டி சொய்சா தெரிவித்தார். திலக் டி சொய்சா மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

'இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் வர்த்தக சம்மேளனம் வழங்கும் பங்களிப்பு, சம்மேளனத்தின் உறுப்பினர்களின் தளராத முயற்சியிலேயே தங்கியுள்ளதாக நான் நம்புகிறேன்.

உற்பத்தித் துறையிலும் ஏற்றுமதித் துறையிலும் கடும் போட்டி மனப்பான்மையுடன் செயலாற்றுவதன்மூலமே திறமையின் உச்சக்கட்டத்தை அடையமுடியும்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஒரு அமைதியான சூழ்நிலை நாட்டில் உருவாக்கப்படவேண்டும். அதனால்தான் அரசின் சமாதான முயற்சிக்கு நாம் நமது பங்களிப்பை நல்கவும் தயாராகவுள்ளோம்.'

- இவ்வாறு திலக் டி சொய்சா தெரிவித்தார்.

இந்த மாநாட்டின்போது திருமதி புவிதோமி கோபிள்ளை, திருமதி ஷெரியாணி ருத்ரநாதன், சுரேஸ்பதிரன, கயோனி வணிகநாயக்க ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (ஒ)

## சட்டவிரோத பயண வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம்

கொழும்பு,ஜுலை30

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்று பிடிப்பட்டவர்களின் வழக்குகளை விசாரணைசெய்ய தனி நீதிமன்றம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்று பிடிபட்ட பல நூற்றுக்கணக்கானோரின் வழக்குகள் தாமதமடைந்து வருவதை அடுத்தே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தனி நீதிமன்றம் குறித்து ஆராய்ந்து வருகிறார்.

கடந்த வருடம் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற பல நூற்றுக்கணக்கானவர்கள் கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 70 பாகிஸ்தானியர்களும் அடங்குவர். (ஒ)

# 2003ஆம் ஆண்டுக்கான இடமாற்றம்; அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்

## வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு அறிவி[ப்பு]

நவாலி,ஜுலை30

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக, உள்ளூராட்சி அமைச்சு 2003ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்திற்கு அரச ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மிகவும் வசதியான நிலையங்களில் 5 வருடமும், வசதியான நிலையங்களில் 4 வருடமும், வசதியற்ற நிலையங்களில் 3 வருடமும், கஷ்டமான நிலையத்தில் 2 வருடமும் சேவையாற்றியிருந்தால் அவ்வலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

அநேக அலுவலர்கள் 5 வருடத்துக்கு மேல், மிகவும் வசதியான நிலையத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்க, மிகவும் கஷ்டமான நிலையத்தில் பல அலுவலர்கள் பல வருடங்களுக்கு மேல் தொடர்ந்தும் சேவையாற்றிக்கொண்டிருப்பது அமைச்சுக்குத் தெரியவந்துள்ளதாகவும் -

இதனால், ஒரு சேவை நிலையத்தில் - ஒரே திணைக்களத்தில் - தொடர்ந்து கடமையாற்றுவது அலுவலகத்தில் பல சிக்கல்களைத் தோற்றுவிப்பதாகவும், இதனால் நிர்வாகத்தில் பெரும் பிரச்சினைகளைத் தவிர்க்குமுகமாக இந்த இடமாற்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் - மேற்படி அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதியாகும். (எ-100)

## அனுமதியின்றி மண் ஏற்றியவர் கிராம அலுவலரிடம் சிக்கினார்

நவாலி,ஜுலை30

யாழ்.கல்லுண்டாய் உப்பளப் பகுதியில் அனுமதியின்றி மண் ஏற்றுவதில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் அண்மையில் அப்பகுதிக்கு திடீரெனச் சென்ற ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமையிலான விவசாய சம்மேளன பிரதிநிதிகள் குழுவினரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

கல்லுண்டாய் வீதியின் தெற்குப் பக்கமாக மண் அள்ளுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்திருந்ததுடன் -

ஆனைக்கோட்டை கிராம உத்தியோகத்தரையும் விவசாய சம்மேளனத்தினரையும் இது விடயத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறும் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே அப்பகுதிக்குச் சென்ற இந்தக் குழுவினரிடம் மேற்படி நபர் சிக்கிக்கொண்டார். இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபரை எச்சரிக்கைசெய்த குழுவினர், இனிமேல் இத்தகைய விடயங்களில் ஈடுபடக்கூடாது என்றும் அறிவுரைகூறி திருப்பி அனுப்பிவிட்டனர். (எ-100)

### நாளை

ஆடி 15
புதன்கிழமை
(31.07.2002)
திதி : ஸப்தமி
பின்னிரவு 1.28 வரை.
நட்சத்திரம்:ரேவதி
முற்பகல் 9.05 வரை
மரணயோகம்
சுபநேரம் : 4.33 - 6.03
ராகுகாலம்: 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தேவைகள் அதிகம் இருப்பவர்களால் நேர்மையாக நடப்பது கடினம்.

## அபிவிருத்திக்கான நிதிவளங்கள் இன்னும் வந்து சேரவில்லையாம்

வலி.வடக்கு,ஜுலை30

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கான பல்வேறு நிதிகளும் இதுவரை அரசினால் அனுப்பிவைக்கப்படாமையால் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்திய நிதி மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுகின்ற பிரமாண அடிப்படையிலான நிதி என்பன இந்த ஆண்டில் இன்றுவரை யாழ்.மாவட்டத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

கடந்த ஆண்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவருக்கு வழங்கப்பட்ட பன்முகப்படுத்திய நிதியில் சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்கு மீண்டும் திருப்பிச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிதியாண்டு எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைய இன்னும் ஐந்து மாதங்களே உள்ள நிலையில் இனிக்கிடைக்கப் பெறும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுமா என்ற வினாவும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுவரை யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக சுமார் ஒரு கோடி ரூபா மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இன்னும் மூன்று மாத காலத்தினுள் மழைக்காலம் தொடங்கி விடக்கூடிய சூழ்நிலையில் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் நிதிமூலம் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளமுடியும் எனவும் கேள்வி எழுப்பப்படுகிறது. (ஒ-86)

## வரணியில் மரங்கள் தறிப்பு

கொடிகாமம்,ஜுலை30

வரணிப் பகுதியில் மரங்கள் திருட்டுத் தனமாகத் தறிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியிலிருந்து வரும் சிலர் வரணியில் பொது இடங்களில் உள்ள மரங்களைத் தறித்து வாகனத்தில் ஏற்றி முள்ளி மற்றும் பாக்கரு இராணுவச் சாவடிகளுடாக எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிக் கிராம அலுவலரும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் மரம் வெட்டுவோரைத் தடுக்க முற்பட்ட சமயம் கிராம அலுவலர் அவர்களால் மிரட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ஒ-ரி)

# பரிசு நாளும் தாபகர் தினமும்

சுழிபுரம், ஜூலை30

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பரிசு நாளும் தாபகர் தினமும இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற வுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபா கே.அருணாசலமும் சிறப்பு விருந்தினராக சங்கானை உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.செல்லையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-28)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர், ஜூலை 30

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-73)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை

திருமதி ஜெகநாயகி இளங்கீரன் அவர்களின் அன்புத் தந்தையார்

## தில்லையம்பலம் இராமலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(6495)


புதிய



போரோ சொப்ட்




மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு,
கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY.
NO.462/B, HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191

சந்தைப்படுத்துவோர்
PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

(C/23101)



HERO CYCLES

HERO CYCLES LIMITED





சர்வதேசரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் பைசிக்கிளுமாகும்

எட்டு வருட காலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே பைசிக்கிளாகும்

ஸ்டாண்ட், ஸ்போட்ஸ் பைசிக்கிள்களுக்கு கரியர் லொக், பெல், ஸ்டான்ட் ஆகிய உதிரிபாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஹீரோ பைசிக்கிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்திற்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது

யாழ்ப்பாணத்தில்

| | | | |
|---|---|---|---|
| E.S பேரம்பலம் & கம்பனி<br>50,52, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | வீ.வேங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்<br>125A கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | ஈஸ்வரன் டிரேடர்ஸ்<br>69, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | பிள்ளையார்<br>சைக்கிள் ஸ்ரோர்ஸ்<br>கன்னாகம் |

Sole Agents

HERO CYCLES

Faizal Hardware Stores
74, Dam Street, Colombo 12,
Phone : 433727,423273,384250-3

(C/22952)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்வரத்தினம் பத்மநாதன்

சுதுமலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் பத்மநாதன் 03.07.2002 கனடாவில் காமலானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான குமரையா தம்பதிகளின் (ஆனைக்கோட்டை) மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் திருமதி இ.கணேஸ்வரன், சீவரத்தினம், இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான பேராயிரம்பிள்ளை, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் குமரசேகரனின் (USA) பாசமிகு தாயாரும் தேவகியின் மாமியாரும் கணேஸ்பரன், ராணி, மங்கை, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் வர்ணா, லக்‌ஷனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*60, புது வீதி, அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.இராசரத்தினம் (சகோதரன்)

(6487)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



இல.10, பாரதி வீதி, கச்சேரி - நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.25/7, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி
## பொன்னுத்துரை இராசம்மா

**தோற்றம்**
15.07.1930

**மறைவு**
01.07.2002

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி நிகழ்வும் மதியபோசனமும் நாளை (31.07.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

*மக்கள்:*
பொன்னுத்துரை சேனாதிராசா (யாழ்.மாநகரசபை மின்சார ஊழியர்), பொ.செல்வராணி - கச்சேரியடி, பொ.அரியமலர் - மாத்தளை, பொ.செல்வராசா - கனடா, பொ.தங்கராசா - புத்தளம், பொ.லலிதாதேவி - வவுனியா, பொ.சகுந்தலா - ஓட்டுமடம், பொ.சௌந்தரராசன் - கொலண்ட், பொ.அமுதா - கனடா, பொ.கிருஷ்ணகுமார் - சுவிஸ்.

*மைத்துனிமார்:*
சின்னம்மா, கண்மணி, பார்வதி, ஆயிசா, இராசமணி, அன்னப்பிள்ளை, நாச்சிப்பிள்ளை, பறுவதம்.

*மருமக்கள்:*
சே.மகேஸ்வரி (வவுனியா), செ.சதாசிவம் (கச்சேரியடி),ச.மயில்வாகனம் (மாத்தளை), செ.மகேஸ்வரி (சுசிலா, கனடா), சி.சீனத் (புத்தளம்), சி.ரவீந்திரன் (வவுனியா), க.செல்வராசா (ஓட்டுமடம்), லதா (கொலண்ட்), சி.சிவபாலரெட்ணம் (கனடா), கலாநிதி (கனடா), ஈசன், சுகி, சுதா, குமார் (ஓட்டுமடம்).

*பேரப்பிள்ளைகள்:*
காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் சந்திரசேகர், சந்திரகாந்தன், சசிகலா, சந்திரவேந்தன், சந்திரசுகந்தன், சந்திரமுகுந்தன், சுரோ, சண்முகராசா, விஜயா, கமலநாதன், சாந்தி, தர்மராசா, சசிகுமார், மாலினி, மல்லிகாதேவி, கமலாதேவி, நந்தினிதேவி, குமரேசன், மகேந்திரன், பத்மினிதேவி, சுதாகரன், சுடாஜினி, றூட்டி, ஜெகன், துஷ்யந்தினி, பிரசாந், ஜெயகரன், வனஜா, செல்வரஞ்சன், செல்வறூபன், சங்கீதா, உதயகுமார், சறோஜினி, ராணி, சுகிர்தா, சித்திராணி, பிறேமா, பாஸ்கரன், பாஹிம், ஜெயம், கௌரி, கிஸ்ணா, சாந்தினி, ராசன், மதி, வாணி, பாஸ்கரன், சுஜிலா, ரஞ்சித்குமார், பயானாநிஷா.

*பூட்டப்பிள்ளைகள்:*
பிரியா, பிரோணி, துஷ்யந்தன், கலைவாணி, பவித்திரன், அனோஜன், தக்சிகா, ஜெகன்ராஜ், யுவன்ராஜ், தரண்ராஜ், சுஜிதா, சுமஸ்ராஜ், ஜீவிராஜ், ராஜ்குமார், வேணுப்பிரியா, வானுப்பிரியா, விஷ்ணுப்பிரியா, நிரோஜன், தனராஜ், சர்பான், கிசாந்தன், சௌமியா, அஸ்மி, கௌசல்யா, ரஞ்சித்குமார், வர்சிகா, செல்வரசன், சங்கீர்த்தனா, சங்கீர்த்தன், சாந்தினி, பவித்திரன் (கனடா), டோஜனா, விதுசா (ஹொலண்ட்).

(6251)

25/7, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

# பழங்கதைகள் பேசிப் பயனில்லை யதார்த்தக் கலைகளே அவசியம்

## யுத்தம் மலிந்த மண்ணில் கருப்பொருளுக்கா பஞ்சம்?

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**

நாடகமென்பது நாம் வாழுகினற இந்த வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். அப்பொழுதுதான் பார்வையாளர்களுக்கு, கேட்போருக்கு அதில் ஓர் அர்த்தம் தெரியும்.

அத்தகைய நாடகங்கள் மூலம் நாம் வாழுகின்ற வாழ்க்கையைப் படம் பிடிக்கலாம். வாழ்க்கைக்கு வேண்டிய விளக்கங்களைக் கொடுக்கலாம். வாழ்க்கையின் குறை, நிறைகளை எடுத்துக்கூறலாம். நல்ல கருத்துக்கள், நீதிகளைக்கூட மக்களுக்குப் புகட்டலாம். எல்லாவற்றுக்கும் மேலாக எங்களது சமூக வரலாற்றை (Social History) பதிவுசெய்தும் வைத்திருக்கலாமே!

தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 'தமிழ்' பாடநூல்களில் ஒன்றிலாயினும், சமகால வாழ்க்கையை சித்திரிக்கின்ற நாடகங்களின் சிறப்புக்களை விளக்கிக் கூறுகின்ற ஒரு கட்டுரைதானும் இல்லை! அத்தகைய ஒரு நாடகம்கூட இல்லை!

ஏதேதோ நாடகங்களை எல்லாம் போட்டிருக்கிறார்கள். சங்க காலக் கதையை வைத்து ஒரு நாடகம் ஏதோ தமிழ்நாட்டில் நாடகமே இல்லாதது போல, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட இந்தியச் சகுந்தலையைப் பிடித்து வந்து கஷ்ரப்பட்டு நாடகமாக்கி போட்டிருக்கிறார்கள். அந்தக்காலத்தில் புலவர்கள் அரசர்களிடம் கூழுக்குப் பாடிச் சென்றது ஒரு நாடகமாகி இருக்கிறது. மிருகங்களை வைத்து ஒரு நாடகம். இப்படியாக எத்தனையோ பாடவாரிகள்!

இவற்றால் தமிழ்ப் பிள்ளைகளுக்கு என்ன லாபம்? அந்தக்கால வாழ்க்கையையா நாம் வாழ்கிறோம்?

காட்டுக்குச் சென்ற துஷ்யந்த இளவரசன் சகுந்தலையைக் கண்டு, காதல்கொண்டு காந்தர்வ மணம் புரிவதும், பின்பு துர்வாச முனிவர் கொடுத்த சாபத்தால் சகுந்தலை துஷ்யந்தன் தந்த கணையாழியை இழப்பதும், அதனால் நினைவு தவறிப் போன துஷ்யந்தன் தன்னைத்தேடி வந்த சகுந்தலையை ஏற்க மறுப்பதும் கணையாழியை மீன் விழுங்குவதும், மீனைப் பிடித்து வெட்டிய மீனவன், அதில் இருந்த கணையாழியை அரசனிடம் எடுத்துச் செல்வதும், துஷ்யந்தனுக்குச் சகுந்தலையின் நினைவு வருவதும், பின்பு அவர்கள் ஒன்று சேர்வதும்... இவையெல்லாம் தேவைதானா இந்தக் காலத்திற்கு?

கல்வித் திணைக்களத்தில் இருக்கின்ற கல்விமான்கள் இவைதான் நாடகம் என்று நினைத்து விட்டார்களோ? அல்லது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகங்கள் எழுத அவர்களுக்குத் தெரியாதா?

எங்களைச் சுற்றி வரலாறு நிகழ்கிறது. வீரம் விளைகிறது. அந்த விளைச்சலை அறுவடைசெய்ய நாங்கள் காத்திருக்கிறோம்.

ஆமிக் காம்புகளிலும் போகவில்லை; அகதிமுகாம்களும் அழியவில்லை! இரண்டும் அருகருகே செழித்து வளர்கின்றன. பொன் கொழிக்கும் மண்கள் சுடுகாடாய்க் கிடக்கின்றன. போர் ஓய்ந்தாலும் கண்ணிவெடிகள் கிடந்து மக்களைக் கொல்கின்றன; அவர்களை மீளக் குடியேறவிடாது தடுக்கின்றன.

இவற்றை வைத்தல்லவா நாடகங்கள் எழுதவேண்டும்? தங்களைப் போன்ற மனிதர்களை நாடகத்தில் காணும்பொழுது பார்வையாளர்கள் அப்பாத்திரங்களுடன் ஒன்றி நிற்பர். அவர்களுடைய பிரச்சினைகள் நாடகத்தில் அலசப்படும்பொழுது, மக்களும் அப்பிரச்சினைகளில் ஈடுபட்டு, சிந்திப்பர், கலங்கி நிற்பர். அல்லது அவற்றைத் தீர்த்து மகிழ்வர். அப்பொழுதுதான் அவர்களுக்கு அந்த நாடகத்தில் ஒரு அர்த்தம் இருப்பது புரியும்!

### வானொலி நாடகங்கள்

இது ஊடகங்களின் காலம். உலகின் வேகமான முன்னேற்றத்துடன் ஊடகங்களும் வளர்ந்துள்ளன. இன்று செய்திகள் மட்டுமல்லாது பெருமளவு கல்வி அறிவும் ஊடகங்கள் மூலமே பரப்பப்படுகின்றது. மாறிவரும் உலகுடன் நாமும் முன்னேற வேண்டுமானால் எங்களது ஊடகத்துறைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும். அவற்றை நன்கு பயன்படுத்தவேண்டும்.

சினிமா, தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்ற பலவிதமான ஊடகங்களில், அதிசக்தி வாய்ந்தது வானொலி ஆகும். இன்று வானொலி இல்லாத வீடுகளே இல்லை எனலாம். எனவே எல்லோரையும் வேகமாகவும், இலவசமாகவும் சென்றடைவது வானொலிதான் என்றால் அது மிகையாகாது.

வானொலியின் வீச்சு (Scope செயற்பாட்டெல்லை, வாய்ப்பெல்லை) அளவிடற்கரியது! அதனால்தான் அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், இயக்கங்கள், மது நிறுவனங்கள் எல்லாம் அதனைப் பயன்படுத்துகின்றன. செய்தி பரப்புதல், கல்விபோதித்தல், பிரசாரம் செய்தல் போன்ற பல தேவைகளுக்கு வானொலி பயன்படுத்தப்படுகிறது. இலங்கையிலும் பல தனியார் வானொலி நிலையங்கள் வந்துவிட்டன. இருந்தாலும், வானொலியின் சக்தியை நாம் இன்னும் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றுதான் கூறவேண்டும்.

வானொலிக்கு இருக்கும் சக்தி, அவ்வளவும் வானொலி நாடகத்திற்கும் இருக்கிறது! தொலைக்காட்சி நாடகங்களுக்கும் சினிமாவிற்கும்கூட, சில குறைகள், திறமைக் குறைவுகள் (Shortcomings) உள்ளன. வானொலி நாடகத்திற்கு எந்தவிதத் தடையும் இல்லை. அதுவிட்டு விடுதலையாகி நிற்கிறது. வானொலிக்காகத் தயாரித்து ஒலிபரப்பமுடியாத நாடகம் என்று எதுவுமே இல்லை! நாடகாசிரியரதும், நாடகத் தயாரிப்பாளரதும திறமைகளைப் பொறுத்து அது அமையும்.

இந்திய வானொலி நாடகங்களைக் கவனமாகக் கேட்டால், அந்த நாடக வகையிலிருந்து உச்சப் பயன்பாட்டை எப்படிப் பெறுவது என்பதை அறிந்துகொள்ளலாம். அங்கே என்னென்ன தேவைகளுக்காக எப்படி எப்படியெல்லாம் வானொலி நாடகத்தைப் பயன்படுத்துகிறார்கள்! இலங்கையில் அதை அந்த அளவுக்குப் பயன்படுத்தவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இலங்கை வானொலியின் தமிழச் சேவை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பி வருகின்றது. ஒவ்வொரு வாரமும் புதுப்புது நாடகங்களை ஒலிபரப்புகின்றது. இவ்வளவு தொகையான நாடகங்களை வேறு எந்த நிறுவனமும் தமிழ்மக்களுக்கு வழங்கவில்லை! இலங்கை வானொலியின் பெரும்பாலான நாடகங்கள் இந்த நாட்டில் வாழும் மக்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிப்பனவையாகும். அதனால் இலங்கையர் எல்லோரும் அந்த நாடகங்களை விரும்பிக் கேட்கின்றனர். (அந்த நாடகங்களை யாழ்ப்பாணத்தில் கேட்காதிருப்பது வேறு விடயம்) நான் எழுதிய வானொலி நாடகங்கள் எல்லாமே நாம் வாழுகின்ற இந்த வாழ்க்கையைச் சித்திரிப்பவையாகும்.

எங்கள் பாடநூல்களில் வானொலி நாடகம் பற்றி ஒரு கட்டுரைகூட இல்லை! கடைசி ஒரு வானொலி நாடகத்தையாவது போட்டிருக்கலாம்.

எங்கள் பல்கலைக் கழகங்களில் கூட மாணவர்களுக்கு வானொலி நாடகம் கற்பிக்கப்படுவதில்லை. 'இல்லை; நாம் அதைக் கற்பிக்கிறோம்' - என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறக்கூடும். அவர்களது பழைய வினாத்தாள்களைப் பார்த்தால் வானொலி நாடகத்தில் ஒரு கேள்வி கூடக் கேட்கப்படாதிருப்பதைக் காணலாம்!

எனவே, எங்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எழுதிப் பழக விரும்பும் மாணவர்கள் இலங்கை வானொலி நாடகங்களைக் கேட்டு அவற்றை எழுதிப் பழகலாம்.

இன்றைய உலகில் தொலைக்காட்சி நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எல்லா மாணவர்களும் கட்டாயம் கற்கவேண்டும்! அவற்றைக் கற்கும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்காதிருப்பது, மாணவர்களுக்குச் செய்கின்ற பெரிய துரோகம்.

✪

# நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஜனாதிபதி இடைநிறுத்தக்கூடும்

## அவதானிகள் கருத்து

கொழும்பு,ஜூலை30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்ற கூட்டத்தொடரை இடைநிறுத்தக்கூடும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்ளவேண்டும் என்ற நெருக்குதல் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் வலுவடைந்திருக்கும் நிலையில் அரசாங்கத்தின் அந்த நோக்கத்தை முறியடிக்கும் முகமாக ஜனாதிபதி நாடாளுமன்ற கூட்டத்தொடரை இடைநிறுத்தக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மனச்சாட்சிப்படி செயற்படுவதற்கு வழிவகுக்கும் சட்டமூலத்தை விரைவில் சபையில் நிறைவேற்றி, நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைத் துண்டித்துவிடுவதே அரசின் தந்திரோபாயமாக இருக்கிறது.

இந்த விவகாரம் குறித்துச் சில காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருப்பதாகக் கருதும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அவரோடு முரண்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனுமதிக்கப்பட்ட இருமாத காலத்திற்குள் நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி இடைநிறுத்தி, பின்னர் அந்த இடைநிறுத்தத்தை மேலும் நீடித்தால் நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய டிசெம்பர் 5ஆம் திகதி வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

# நோயாளிகளின் செயற்பாட்டால் மருத்துவர்களுக்குச் சிரமமாம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வருகின்ற சில நோயாளிகளின் செயற்பாடுகளால் வைத்தியர்களும் மற்றும் ஊழியர்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

வைத்தியசாலையின் நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமல் தமது எண்ணப்படி நடந்துகொள்ளும் இவர்களால் ஏனைய நோயாளிகளுக்கும் இடைஞ்சல் ஏற்படுகின்றது.

ஏற்கனவே திகதி குறிக்கப்பட்டுச் சத்திர சிகிச்சைக்கு வருகின்ற நோயாளிகளும் அதற்குரிய ஒழுங்குடன் வராது தாம் நினைத்தவாறு தங்க ஆபரணங்களை அணிந்து வருவதுடன் கணிசமான பணத்தையும் தம்முடன் எடுத்துவருவதால் அவர்களைச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தும்போது மேற்படி ஆபரணங்கள், பணம் போன்றவற்றைப் பொறுப்பெடுப்பதில் வைத்தியசாலை நிர்வாகத்துக்குச் சிக்கல் ஏற்படுவதுடன் பிறரிடம் அவற்றைக் கொடுத்து விட்டு உரியவர்கள் ஏமாறும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

இது பலருக்கும் இடைஞ்சலாக அமைவதால் ஊழியர்களும் தமது கடமையைச் செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை -

சத்திரசிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்குச் சுத்தமான வெண்ணிற ஆடைகளை அணிந்து வருமாறு கூறப்படுகின்றபோதும் பெரும்பாலானவர்கள் அவ்வாறு வருகைதராமல் வர்ண ஆடைகளையும் அசுத்தமான ஆடைகளையும் அணிந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10-15)

# இலங்கைக்கு சீனா உதவி

கொழும்பு,ஜூலை30

இலங்கைக்கு 65 கோடி ரூபாய் நிதியுதவியை சீனா வழங்கியுள்ளது.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் கரு ஜயசூரியவும் சீன வெளிவிவகார அமைச்சரும் மேற்கொண்ட பேச்சையடுத்தே சீனா இவ்வுதவியை வழங்க முன்வந்துள்ளது.

இவ் விஜயத்தின்போது அமைச்சர் கரு ஜயசூரிய சீன அரசுக்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்தும் விளக்கமளித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

# ஈழத்து சிதம்பரத்துக்கு நேரடி பஸ்சேவை

காரைநகர்,ஜூலை30

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவி மஹோற்சவத்தை முன்னிட்டு வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் யாழ்நகரில் இருந்து ஆலயத்துக்கு நேரடி பஸ்சேவை நடத்தப்படவுள்ளதாக மேற்படி சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தேவி மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. இந்த மஹோற்சவ காலங்களிலும், ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 8ஆம் திகதியும் விசேட பஸ்சேவைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-73)



சிற்பி சிவசரவணபவன் எழுதிய 'சத்திய தரிசனம்' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா அண்மையில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை முதறிஞர் சு.வேலுப்பிள்ளையிடமிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் பாரியார் திருவாட்டி சரஸ்வதி தர்மலிங்கம் பெறுவதைப் படத்திற் காணலாம். நூலாசிரியர் சிற்பியும் படத்தில் காணப்படுகின்றார். (எ)

# 'வனிதா வாசனா' பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை30

மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா' மகளிர் கணக்கு சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் மக்கள் வங்கியின் யாழ்.கன்னாதிட்டியில் உள்ள பிராந்தியத் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்குத் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடந்த சித்திரைப் புதுவருடத் தினத்தன்று வாடிக்கையாளர்களில் அதிக பணம் வைப்புச் செய்யப்பட்ட சுன்னாகம் கிளை, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை மற்றும் காங்கேசன்துறைக் கிளை ஆகியவற்றின் முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஒ-10)

# விலை குறைக்கப்பட்டபோதும் நிவாரண அரிசி அளவு கூடவில்லை

## பொதுமக்கள் விசனம்

வலிவடக்கு,ஜூலை30

நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசியின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அரிசியும் குறைந்தளவிலேயே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

103ஆம் இலக்க நிவாரணப் புள்ளிக்கு, கடந்த மாதம் நாட்டரிசியும், பச்சை அரிசியுமாக வழங்கப்பட்ட எடையிலும் பார்க்கக் குறைவாகவே அரிசி வழங்கப்படுவதால் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரிசியின் விலை மற்றும் அளவு என்பன குறைக்கப்பட்டு அதற்கான பணப் பெறுமதிக்கு சீனி, பருப்பு என்பன அதிகளவில் வழங்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-86)

# ஈ.பி.டி.பியின் மறுப்பும் உதயனின் விளக்கமும்

"புலிகளை யுத்தத்தில் தோற்கடிக்க வேண்டும் என செயலாளர் நாயகம் கூறியிருக்கவில்லை" - என்ற தலைப்பில் செய்தி ஊடகங்களுக்கான அறிக்கை ஒன்றை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) 'உதயன்' அலுவலகத்துக்கு நேற்றுமுன் தினம் அனுப்பிவைத்துள்ளது.

'திவயின' சிங்கள வார இதழுக்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அளித்த பேட்டி ஒன்று 21.07.2002 அன்று அப்பத்திரிகையில் பிரசுரமானது.

அதன் தமிழ்மொழியாக்கம் - 'திவயின' வார இதழை மேற்கோள்காட்டி - ஒருவாரம் கழித்து, 28.07.2002 அன்று 'உதயனி'ல பிரசுரிக்கப்பட்டது.

'உதயனி'ல் வெளியான பேட்டி குறித்தே ஈ.பி.டி.பி. இப்போது மறுப்பு அறிக்கை அனுப்பியிருக்கின்றது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புலிகளை யுத்த ரீதியாகத் தோல்வியுறச் செய்த பின்னர்தான் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென்ற அர்த்தத்தில் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூறியதாகக் கடந்த 21.07.2002 திகதிய 'திவயின' இதழில் வெளியான கருத்து முற்றிலும் தவறானதாகும். இதனை மேலும் திரிவுபடுத்தி 28.07.2002 திகதிய 'உதயன்' நாளிதழ் வெளியிட்டிருப்பது கண்டனத்திற்குரியதாகும்.

செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை நேர் கண்ட செய்தியாளர் ரவீந்திர விஜயவர்த்தனா "புலிகளை யுத்தத்தின் மூலமாகத் தோற்கடிக்க வேண்டும் என்றா கூறுகிறீர்கள்?" என வினா எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த செயலாளர் நாயகம் அவர்கள், புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக எமக்கு நம்பிக்கையீனம் உள்ளது. எனினும், புலிகள் பேச்சுவார்த்தைகளில ஈடுபடுவதை நாம் எதிர்க்கப்போவதில்லை என்றே கூறியிருந்தார். கடந்த காலத்திலும் அரசாங்கங்கள் புலிகளுடன் பேசித் தீர்வுகாணலாம் என்ற நம்பிக்கையோடு செயற்பட்டபோது நாம் எவ்விதத்திலும் முட்டுக்கட்டை போட்டு நிற்கவில்லை. இன்றும்கூட எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் இருக்கின்றபோதும் ஆயுதங்களைக் கையளித்து சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதைச் சகலரும் அறிவர். அத்துடன், புலிகள் படையினருடன் மோதல்களில் ஈடுபட்டிருந்த காலத்தில்கூட படையினருடன் இணைந்து புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எதிலும் எமது கட்சி ஈடுபட்டிருக்கவில்லை. எனவே, இப்பொழுது புலிகள் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது உளப்பூர்வமானதா? என்ற சந்தேகம் எமக்கு இருப்பினும், புலிகளை யுத்தத்தின் மூலமாகத் தோற்கடிக்கவேண்டும் என்னும் எண்ணம் எமது கட்சிக்கு இல்லை. இதனை இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறோம்.

இதேவேளை, ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காணபதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு சுயாட்சியுடன் மத்திய அரசாங்கத்தில் அனைத்து இன மக்களும் பங்கேற்கும் கூட்டாட்சி நிலைபெற வேண்டும் என்பதே எமது எண்ணமாகும். இந்த இலக்கை எட்டுவதற்காக நடைமுறைச் சாத்தியமான மாற்றுவழியில் எமது கட்சி செயற்பட்டு வருகின்றது என்பதையும் எடுத்துரைக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**ஆசிரியர் குறிப்பு:-**

1. 'திவயின' பத்திரிகைக்கு டக்ளஸ் தேவானந்தா உண்மையில் இப்படிக் கூறியிருந்தாரா அல்லது அவர் கூறாததை 'திவயின' பத்திரிகை பிரசுரித்ததா என்பது குறித்து நாம் ஏதும் கூறமுடியாது.

2. ஆனால், 21.07.2002 அன்று 'திவயின' பத்திரிகையில் - சிங்களத்தில் - சிங்கள மக்களுக்காகப் பிரசுரிக்கப்பட்ட செய்தியில் "புலிகள் பயங்கரவாத அமைப்பினர். அவர்களை யுத்த ரீதியாகத் தோற்கடித்தே அரசியல் தீர்வு குறித்துப் பேசவேண்டும்'' என்று டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டதாக, கேள்வி - பதில் ரீதியில் வெளியான தகவல் குறித்து, 28.07.2002 அன்று உதயனில் அதன் தமிழ்மொழியாக்கம் பிரசுரமாகி, தமிழ்களுக்கும் அத்தகவல் எட்டும்வரை, அதை மறுக்கும் எண்ணம் - நோக்கம் - ஈ.பி.டி.பிக்கு ஏற்படவில்லை.

3. சரி, அதற்குப் பின்னராவது 'உதயனு'க்கு மறுப்பு அனுப்பிய ஈ.பி.டி.பி., இந்தச் செய்தியின் மூலத்தைப் பிரசுரித்த 'திவயின' பத்திரிகைக்கு அதை அனுப்பியதா என்றால் இல்லை. நேற்று நண்பகல் 12 மணிவரை இத்தகைய மறுப்பு எதனையும் ஈ.பி.டி.பி. அனுப்பவில்லை என்பதை அப்பத்திரிகையின் ஆசிரிய பீடம் உறுதிப்படுத்தியுள்ளது.

4. "புலிகளை யுத்தத்தின் மூலமாகத் தோற்கடிக்க வேண்டும் என்னும் எண்ணம் எமது கட்சிக்கு இல்லை'' - என்று இப்போது தமிழில் அனுப்பிய மறுப்பில் தாம்கூறும் விளக்கம், வியாக்கியானத்தை சிங்கள மக்களுக்கு எட்டக்கூடியதாக இன்னமும் அவர் அனுப்பிவைக்கவில்லை. இனிமேலும் அனுப்பிவைப்பாரா?, அது சிங்கள 'திவயின' வார இதழில் அதே முக்கியத்துவத்துடன் பிரசுரமாவதற்கு அழுத்தம் கொடுப்பாரா? என்பதெல்லாம் சந்தேகமே.

5. "21.07.2002 திகதிய 'திவயின' இதழில் வெளியான கருத்து முற்றிலும் தவறானதாகும். இதனை மேலும் திரிவுபடுத்தி 28.07.2002 திகதிய 'உதயன்' நாளிதழ் வெளியிட்டிருப்பது கண்டனத்துக் குரியதாகும்'' - என்று ஈ.பி.டி.பி. தனது மறுப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட கேள்வி - பதில் பகுதியின் மொழியாக்கத்தில் எந்தத் திரிபையும் நாம் செய்யவிலலை. அதை வாசகர்கள் அறிந்துகொள்வதற்காக சிங்களப்பத்திரிகையில் வெளியான அந்தக் கேள்வி - பதில் பகுதியின் போட்டோப் பிரதியும், 28.07.2002 'உதயனி'ல் பிரசுரமான அதே கேள்வி - பதிலின் தமிழாக்கத்தின் போட்டோப் பிரதியும் இதே பக்கத்தில் பிரசுரமாகின்றன.

6. இந்தச் செய்தியில் 'உதயன்' ஏதும் திரிபுபடுத்தியுள்ளதா? அல்லது தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் வெவ்வேறு திரிபுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதன்மூலம் அரசியல் நடத்தும் தமது இரட்டை வேடப்போக்கை அம்பலப்படுத்துவதை சகிக்கமுடியாத சிலர், 'உதயன்' மீது பொய்க்குற்றம் சுமத்துகிறார்களா? - என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்வார்களாக!

(ஆ-ர்)

මුස්ලිම් ජනතාවගේ නියෝජිතයා වශයෙන් නොපිළිගන්න

පිළිතුර - රාවුෆ් හකීම්ටයි කරිකාලන් ගැන එහෙම කියන්න තිබුණේ. මොකද කරිකාලන්ල ඡන්දෙකට ඉදිරිපත් වෙලා නායකයෝ වෙලා නැහැ.

ප්‍රශ්නය - ඔබ කියන්නෙ එල්ටීටීඊය යුද්ධයෙන්ම පරාජය කළ යුතුයි කියලද...?

පිළිතුර - ඔව්. එල්ටීටීඊය ත්‍රස්තවාදී සංවිධානයක්. ඔවුන් යුද්ධය මගයෙන් පරාජය කරලයි දේශපාලන විසඳුමක් ගැන කතා කළ යුත්තේ.

ප්‍රශ්නය - මේ අර්බුදයට ඔබ ඉල්ලන දේශපාලනමය විසඳුම මොකවගේ එකක්ද...?

පිළිතුර - අපි ඉල්ලන්නේ එක්සත් ලංකාවක සමාදාන සහජීවනයක්. ඒ කියන්නෙ මධ්‍යම ... ක් පවතින සභාය ආණ්ඩුවක්. ...

ஜூலை 21ஆம் திகதிய 'திவயின'வில்...

பதில்: ரவூப் ஹக்கீமுக்கும் கரிகாலனைப் பற்றி அவ்வாறே கூறமுடியும். ஏனெனில் கரிகாலன் போன்றோர் தேர்தலில் போட்டியிட்டுத் தலைவர்கள் ஆனவர்கள் அல்லர்.

கேள்வி: புலிகளை யுத்தத்தில் தோற்கடிக்கவேண்டும் என நீங்கள் கூறுகிறீர்களா?

பதில்: ஆம். புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கத்தினர். அவர்களை யுத்தத்தின் மூலம் தோற்கடித்த பின்னரே அரசியல் தீர்வு குறித்துப் பேசவேண்டும்.

ஜூலை 28ஆம் திகதிய 'உதயனி'ல்...



# ஜனாதிபதியின் விருப்பங்களுக்கு ஏற்ப ஆடும் நிலையில் நாடாளுமன்றம் இல்லை

நாடாளுமன்றமும், அமைச்சரவையும் நாட்டிலேயே மிகப்பெரிய நாடக அரங்குகளாக மாறிவருகின்றன. அங்கு சோக, நகைச்சுவை நாடகங்களுடன் துப்பறியும் நாடகங்களும் மாறி மாறி நடைபெறுகின்றன.

அமைச்சரவை அரங்கில் துப்பறியும் கதை பெரும் பரபரப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் சண்டைக் காட்சி, சிறந்த நடிகர் நடிகைகளைத் தெரிந்தெடுப்பதில் ஊடகங்கள் தீவிரமாக ஈடுபடுகின்றன.

அதேவேளை, காட்சியரங்கொன்றினுள் தொலைக்காட்சி நிருபர் புகுந்து நிகழ்ச்சிகளை பதிவு செய்திருக்கிறார். இதனை, தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டபோதே கண்டறிந்துகொண்டதாக நாடகத்தின் அமைப்பாளர்களே வியந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இரு கட்சிகளினதும் பொது உடன்பாடு தேவை. அது வெறுமனே ஒரு விருப்பத்தினடிப்படையிலானதாக இருத்தலாகாது.

ஆனால், தேசிய நலன் கருதிய இன்றியமையாத தேவை என்பது உணரப்படவேண்டும் என்று பாழும் கிணற்றின் அடியில் நின்றுகொண்டு இடும் ஓலம்போல வூட்றோ வில்சன் சர்வதேச நிலையத்திலிருந்து பிரதமரின் குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் அவர். தனது முழுத் திறமையையும் காண்பித்துக்கொண்டிருக்கிறார்.

அந்நியோன்னியமான குடும்ப வாழ்க்கையை விரும்பும் ஒருவரும் ஏழில் செவ்வாய்க்காரரான மற்றவரும் நடத்தும் குடும்ப வாழ்க்கைபோல அலைமோதும் காட்சிகள் நடைபெற்றுக்கொண்ருக்கின்றன. மாரடைப்பினால் மரணமடையப்போவது நாடுதான்.

ஜனாதிபதியின் விருப்பங்களுக்கு ஆட மறுக்கும் நாடாளுமன்றம். நாடாளுமன்றத்தின் போக்கை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஜனாதிபதி ஒருவர். தாக்குவதற்கு முந்திக்கொண்டு தாக்கவிரும்பும் மற்றவர், வாய்ப்புக்காகக் காத்திருக்கும் அரசியல் நிலைப்பாடு. இருதரப்பினருக்குள்ளும் பொதுவான ஒரு ஒற்றுமையும் உண்டு.

இருவருக்குமே போதிய பெரும்பான்மை இல்லை. ஆட்சியதிகாரத்தில் கையில் அகப்பட்ட பகுதியை இறுகப் பற்றிக்கொண்டு மீதிப் பகுதியைப் பறித்தெடுக்கும் தந்திர, சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருககின்றனர்.

### கண்டிப்பானவர்கள்

ஜோன் அமரதுங்கவும் ரவி கருணாநாயக்கவும் கண்டிப்பான பேர்வழிகள். இவர்களை அதிகாரத்திலிருததி வைத்திருப்பது பொ.ஐ.முன்னணியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்குத் தடையாக இருக்கிறது.

அமைச்சரவையிலிருந்து இவர்களை நீக்குவதற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறும் வரை காத்திருப்பது முட்டாள்தனம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. ஜீ.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க ஆகியோரில் உடனடியாகக் கைவைத்தால் ஆபத்து.

அவர்களுக்கு இரு கட்சிகளுக்குள்ளும் ஆதரவு இருக்கிறது. வெறுப்பு அதிகம் இருந்தாலும் அரசியல் ரீதியாக முன்வைக்கப்படக்கூடிய காரணங்களும் வேண்டுமே!

இது இவ்வாறிருக்க, ஏழில் செவ்வாய் அரசாங்கத்தின் அடுத்த பங்காளியான ஐ.தே.மு., ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும். டிசெம்பர் 5ஆம் திகதியின் பின்னரும் நாடாளுமன்ற ஆட்சி தமது கையில் இருக்க வேண்டுமானால் இது நிறைவேறியே ஆகவேண்டும். ஆனால், அவர்களிடமும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை.

பெரும்பான்மை போதாத இரு தரப்பினரும் என்ன செய்யலாம்? நினைத்ததைச் சாதிக்க முடியவில்லை. அதனால், சமாதானத்தை துணைக்கிழுத்து அதற்குக் கொடுக்கக்கூடிய அதிகூடிய முக்கியத்துவத்தையும் கொடுத்து, ஒரு பொது உடனபாடு என்ற பெயரில் வாய்ப்பான சூழல் அமையும் வரையாவது காலத்தை ஓட்டுவதுபற்றிச் சிந்திக்கலாம்.

அதுவே ஒரேயொரு ஜனநாயக எல்லைக்குள் அடங்கக்கூடிய மாற்றுவழியாகவும் இருக்கும். இதனையும் குறுகியகால அவகாசத்திற்குள் உறுதி செய்துவிடவேண்டும். டிசெம்பர் 5ஆம் திகதி வந்துவிட்டால் எல்லாமே அரோஹரா ஆகிவிடலாம்.

யுத்தம்மூலம் சமாதானம் என்பதே ஜனாதிபதியின் கொள்கை. ஐ.தே.மு.இப்பொழுது அந்தக் கொள்கையில் நம்பிக்கை வைத்துள்ளது போலிருக்கிறது.

ஜனாதிபதியை சமாதானத்திற்கு இணங்கவைக்கவேண்டுமானால் அவர் வைத்திருக்கும் பதவியைப் பறிக்கப் போவதுபோல போக்குக்காட்டி யுத்தம் செய்யவேண்டும்.

1999இல் சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த மக்கள், 2001 நவம்பரில் மனதை மாற்றிக்கொண்டு விட்டாகள். மக்கள் மனங்களில் "கைவிடப்பட்டவரான ஜனாதிபதி" என்ற உளவியல் அச்சம் ஏற்கனவே ஊட்டப்பட்ட நிலையில் ஊழல் குற்றச்சாட்டுக்களையும் சுமத்திப் போருக்கு இழுத்தால் அவர் ஐ.தே.மு. அரசுடன் உடன்பாடொன்றுக்கு வரமுடியும்.

18ஆவது திருத்தச் சட்டத்தின் தேவையில்லாமலேயே நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து நடத்தவும், ஜனாதிபதிப் பதவி பறிபோய்விடுமோ என்ற அச்சமில்லாமல் பதவியைத் தொடரவும் இருதரப்புக்கும் வாய்ப்பான சூழ்நிலை தேன்றமுடியும்.

### பாதுகாப்புக் காரணம்

இந்த நம்பிக்கை தவறாக இருக்காது. பாதுகாப்பு காரணங்களைக் காட்டி 50 வரையிலான ஆடம்பரக் கார்களை பலகோடி ரூபாய்களுக்கு இறக்குமதி செய்த விவகாரம் இன்று உச்சக்கட்டத்தில் ஜனாதியை சூழ்ந்து கொண்டுள்ளது.

முறைகேடாக இதற்கான பணம் திறைசேரியிலிருந்து பெறப்பட்டிருப்பதாகவும், ஜேர்மனியத் தயாரிப்பு எனக் குறிப்பிட்டிருந்தாலும் வாகனங்கள் ஜகார்த்தா, பிறிஸ்பேன் பகுதிகளிலிருந்தே இறக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிகிறது.

வாகனங்களின் சரியான எண்ணிக்கையே முடிவுசெய்யப்படாமலிருக்கிறது. பதிவு இலக்கங்கள் இல்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனாதிபதி செயலகம் விளக்கமளித்திருந்தாலும் அது அமைச்சரவைக் குழுவுக்குத் தேவைப்படும் விளக்கங்களாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

1999டிசெம்பரில் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படவிருந்ததால் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே யாவும் நடைபெற்றன என்று கூறப்பட்டாலும் உண்மையில் இவ்வாகனங்களின் கொள்வனவு முயற்சிகள் 1998இலேயே தொடங்கப்பட்டிருந்ததாக இப்பொழுத புதிய தகவல்கள் வெளியாகின்றன.

வாகனங்கள் புதியவையல்ல. அவை ஒலிம்பிக் விளையாட்டுகளில் பயன்படுத்தப்பட்டபின் பழைய வாகனங்களாகவே விற்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. மக்கள் பணத்தை மோசடியாகவோ, ஊதாரித்தனமாகவோ செலவுசெய்ய முடியாது.

அமைச்சர் ரவி கருணாநாயக்க கிளப்பியுள்ள புலனாய்வுக் 'கமரா' விவகாரம் ஜனாதிபதி மீது தொடுக்கப்பட்ட மேலுமொரு யுத்தமாகும்.

பொதுக் கருத்தினடிப்படையிலான உடன்பாட்டு அரசாங்கத்திற்கு அவரைச் சம்மதிக்க வைப்பதற்கான முயற்சியா? பிரதமர் விக்கிரமசிங்க அமெரிக்காவில் நின்றபடி பொது உடன்பாடு ஓர் இன்றியமையாத தேவை என வலியுறுத்துகின்றார்.

ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களுக்கு எடுத்து வந்ததாகக் கூறப்படும் அதியுயர் நவீன ஒலி, ஒளிப் பதிவுக் 'கமரா'வை உள்ளடக்கிய கைப்பை பற்றிய மர்மங்கள் தொடர்கின்றன.

அப்படியான 'கமரா' ஒன்று பற்றி உத்தியோக பூர்வமான மறுப்பு வெளிவரவில்லை.

அமைச்சரவை இரகசியங்கள் சில பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் கிடைத்துவிடுகின்றன என்பது ஜனாதிபதியின் நீண்டகாலக் குற்றச்சாட்டு. அவரும் அமைச்சரவை இரகசியங்கள் விடயத்தில் விழிப்புடன் இருப்பவர். ஆனால் குற்றச்சாட்டும் அவரைச் சுட்டுவதாக உள்ளது.

### தலைகுனிவு

மேற்படி குற்றச்சாட்டுகள் இரண்டும் நீதி விசாரணைக்குட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்படுமாயின் பொ.ஐ.முவுக்கு நிரந்தரமான தலைகுனிவு ஏற்படும் என்று கூறலாம். ஆனால், சமாதானத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு வேண்டிய பொது உடன்பாட்டை நடைமுறையில் ஜனாதிபதி ஏற்கும் நிலை கேள்விக்குறியாகவே இருக்கும்.

நாடகக் காட்சி திசை திரும்பியது பற்றி உற்று அவதானித்துக் கருத்து வெளியிட்டிருப்பவர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்.

50 கார்கள் இறக்குமதி விவகாரம் சூடுபிடித்து நிற்கும் வேளை, புலனாய்வுக் 'கமரா' பற்றிய எத்தனையோ தாற்பரியங்கள் ஆராயப்படவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

*நன்றி: சுடர்ஒளி.*

★

## நாடக அரங்காக அது மாறியதால் மக்கள் மத்தியில் வெறுப்புணர்ச்சி

# தமிழ்க் கைதிகளின் விடுதலையை அரசியல் விளையாட்டு ஆக்காதீர்!

## புனர்வாழ்வு நிறுவனம் வலியுறுத்து

நாட்டில் யுத்த மேகங்கள் கலைந்து; குண்டுச் சத்தங்கள் ஓய்ந்து நிரந்தர அமைதிக்கான முன நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் பெரும்பாலான மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தவேளையில், சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருபபது மிகுந்த வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது.

- இவ்வாறு அரசியல் கைதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக நிறுவனம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

விசாரணைகளுக்கு உள்ளாகி அனுபவித்த சித்திரவதைகள் வேதனைகளின் பின்னரான தனிமை, போதிய மருந்து, உணவு வசதியின்மை, சிறைச்சாலைகளுக்கே உரிய துயரத் தன்மைகள் போன்ற காரணங்களினால உடல், உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள். அவர்களின் மன உணர்வுகள், ஏக்கங்கள் சோகங்களை வெறும வார்த்தைகளில் எவராலும் முழுமையாக விவரித்துவிட முடியாது.

பத்து வருடங்கள் கழிந்த நிலையிலும் விசாரணைகள் பூர்த்திசெய்யப்படாத நிலையிலும் பல கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். வயோதிபர்கள், அங்கவீனர்கள், மனநோயாளிகளும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதைத தமிழ் அரசியல் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்குச் செல்பவர்களினால் காணமுடியும்.

சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தமது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கைகள் எதுவுமற்றவர்களாக வாடிக்கொண்டிருக்க வெளியில் அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகம்.

ஒருநேர உணவுக்குக்கூட வசதியற்ற நிலையில் பல குடும்பங்கள் உயிர்வாழ்வதற்காகப் பட்டினியுடன் போராடிக்கொண்டிருக்கின்றன. பல தாய், தந்தையர்கள் சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் ஈவிரக்கமற்ற நிலையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால் பல குழந்தைகளின எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து நாட்டில் பல நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. விடுதலைப் புலிகள் சுதந்திரமாகத் தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு உதவி புரிந்தார்கள் என்று வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது ஏன்?

இந்தக் கேள்வி சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள், அவர்களின் குடும்பத்தினர் உட்படப் பல்வேறு தரப்பினராலும் எழுப்பப்படுகின்றது. ஆயினும் அதற்குச் சரியான பதிலளிக்கக் கூடியவர்கள் எவருமில்லை.

"தம்மை விடுதலை செய் அல்லது விசாரணை செய்" எனக்கோரி தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொள்ளும் சாத்வீகப் போராட்டங்கள் இரத்த வாந்தி எடுக்கும் அளவிற்கு அவ்வப்போது தொடர்ந்தும் அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அதிகாரத்தில உள்ளவர்களின் செவிகளில் சரியான முறையில் ஏறாதிருப்பது பெரும ஏமாற்றத்திற்குரியது. இந்த நிலைமை தொடர்வதன் மூலம் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடுமோ என்ற அச்சம் மேலோங்குகின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை இனியும் அரசியல் பம்மாத்துகளுக்குப் பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வரையில் அவர்களின் விடயத்தைப் பின்போடாமல், மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினையை அணுகி, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கு அரசாங்கமும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் உரிய நடவடிகைகளை எடுக்க முன்வர வேணடும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அரசியல் கைதிகளுககான புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. (ஒ)

# நல்லூர் உற்சவம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை30

எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் முதல்வர் செ. கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி, மாநகரசபையின் அதிகாரிகள், நீர் விநியோகப் பகுதியினர் மற்றும் தொண்டர் அமைப்புக்கள், முதலுதவிப் படைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலயத்தின் சுற்றாடலை தூய்மையாக்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-10)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.7 இற்கான விடைகள் வருமாறு:-

### பகுதி I

| | | |
|---|---|---|
| 1. (4) | 2. (1) | 3. (3) |
| 4. (2) | 5. (2) | 6. (2) |
| 7. (2) | 8. (3) | 9. (4) |
| 10. (2) | 11. (3) | 12. (4) |
| 13. (2) | 14. (1) | 15. (1) |
| 16. (3) | 17. (D) | 18 (2) |
| 19. (3) | 20. (3) | 21. 24 |
| 22. (4) | 23. (1) | 24. பரி |
| 25. சேவல் | 26. பள்ளம் | |
| 27. பொற்காசு | 28. ஆடி | |
| 29. விருட்சம் | 30. வரவேற்பு | |
| 31. துன்பமுற்று | 32. ஒழுங்கற்ற | |
| 33. (1) | 34. (4) | 35. (3) |
| 36. (4) | 37. (3) | 38. (3) |
| 39. (3) | 40. (2) | |

### பகுதி II

1. [.] [.] [.] / [.] [.] [.]
2. அருணிகனால் (மகனால்) / அப்பாவுக்கு
3. 16ரூபா 50சதம்
4. 4ரூபா 50சதம்
5. பிற்குறிப்பு 6. 94ரூபா
7. 106ரூபா
8. (i) Father (ii) I
9. School 10. Son
11. வீதி 12. உங்கள்
13. தரம் 14. கடிதம்
15. (5) 16. (4) 17. (2)
18. (3) 19. (1) 20. ✗
21. ✗ 22. ✓ 23. ✓
24. ✗ 25. (4) (1) (3) (2)
26. பெண்பிள்ளையை
27. சிலைக்கு 28. அன்னை
29. நீ / உன்னை
30. நின்றாய் / சிந்துகின்றாய்
31. ஏன்? 32. தலை
33. வா 34. என்னை
35. சிரம் 36. விழி
37. அன்னைமார் 38. பூக்கள்
39. நீங்கள்
40. பாடசாலைகளுக்கு
41. head 42. flower
43. eye 44. you
45. தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி
46. "சிக்னல்" பற்பசை பாவிக்க வேண்டும்.
47. பாற்பற்கள்
48. 32 49. கனவுரு
50. 8,12
51. உணவை அரைத்தல்
52. 2kg 450g
53. 5ரூபா
54. 3 55. 1 56. 2
57. 1 58. 2 59. 3
60. 3 61. உலையிடல்
62. தட்டுதல் 63. கூராக்குதல்
64. பிடிசெய்தல் 65. 200
66. சீனி, பருப்பு மா, பருப்பு
67. 3500kg 68. 1/8
69. 30ரூபா 70. 83ரூபா 25சதம்
71. 14ரூபா
72. 5ரூபா 10சதம்
73. 37ரூபா 25சதம்
74-79 பொருத்தமான கருத்துடைய வசனங்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர் திரு.க.சிவராசா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

*காங்கேசன்துறை,*
*மல்லாகம்.* (C/23103)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

### திரு.மா.து.பாலசுந்தரம்

B.A.Dip.Ed.SLPS 2:II

அவர்கள் அதிபர் சேவை தரம் 2:IIஇற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை நலமுடன் வாழ இறைவனை வேண்டி உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்,
கல்விசார ஊழியர்கள்,
யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்.

(6507)

உ

சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் ஞானவைரவர் தேவஸ்தானத்தினர்
ஆலயத்திருப்பணி நிதிக்காக நடத்திய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - இல. 0032
இரண்டாம் பரிசு - இல. 0350
மூன்றாம் பரிசு - இல. 0843

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 4858 | 6072 | 5990 | 0445 | 3776 |
| 0424 | 4280 | 1138 | 0625 | 3296 |

*பரிசுக்குரியவர்கள் சீட்டையையும் அடையாள அட்டையையும் சமர்ப்பித்து ஓகஸ்ட் 27ஆம் திகதிக்கு முன் ஆலய நிர்வாகத்தினரிடம் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.*

- ஆலய பரிபாலன சபையினர்.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி றெஜி பெரேரா அவர்களின் பணிப்பின் பேரில் யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளரால் பின்வரும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வைத்திய நிபுணர்
02. வைத்திய உத்தியோகத்தர்
03. பதிவுசெய்யப்பட்ட உதவி வைத்தியர்
04. உதவி வைத்தியர்
05. துணைநிலை வைத்திய சேவை -
    1. *வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர்*
    2. *கதிரியக்க படப்பிடிப்பாளர்*
    3. *இயன் மருத்துவ சேவையாளர்*
06. தாதிய உத்தியோகத்தர்

இவர்கள் மீள்நியமனம் செய்யப்படுமிடத்து பொது சுற்றுநிருப இலக்கம் 7/2002இன்படி இவர்களுக்கு ஓய்வூதியத்துடன் கடைசியாகப் பெறப்பட்ட சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பங்களை நேரிலோ, கடிதமூலமோ பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகன்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-23104)

## முதலாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 06 - 05 - 1923



இறப்பு 11 - 07 - 2001

### திருமதி பழனிச்சாமி செல்லம்மா

(நாச்சிமார் கோயிலடி)

*ஓராண்டு கடந்தாலும் உம் நினைவு மாறாது.*
*ஆத்மா சாந்தி அடைவதாக!*
*ஓம் சாந்தி!*

*இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*"பிரசாந்தி"* திருமதி சுசரோஜா குடும்பத்தினர்.
*தலையாழி லேன், கொக்குவில்.* (சி-23102)

## ஆணைக்குழு முன் ஆஜர்

விமானப்படையின் முன்னாள் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி நேற்று லஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு முன் ஆஜரானார்.

பதவியில் இருந்தபொழுது சொகுசு வாகனம் ஒன்றை வாங்கியது தொடர்பான விசாரணைக்கு அவர் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார்.

ஏற்கனவே அழைக்கப்பட்டிருந்தபோதிலும் உடல்நலக்குறைவு காரணமாக அவர் அப்பொழுது ஆணைக்குழு முன் ஆஜராகவில்லை. (ம)

## பாடசாலை அருகில் வெடிபொருள்கள்

தென்மராட்சி,ஜூலை30

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் வெடிக்காதநிலையில் ஷெல் ஒன்றும், மிதிவெடியொன்றும் காணப்பட்டன. கல்லூரிக்கு அருகில் உள்ள காணியைத் துப்புரவு செய்யும்போது அங்கு அமைந்திருந்த காவலரணுக்கு அருகில் இவை காணப்பட்டன.

இவற்றினை மீட்குமாறு படையினருக்கு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டும் இதுவரை மீட்கப்படவில்லை. கல்லூரி மாணவர்கள் நடமாடும் இப்பகுதியில் காணப்படும் அந்த வெடிபொருள்கள் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## கைவிடப்பட்ட பெண்களுக்கு செயலமர்வு

கணவனால் கைவிடப்பட்ட வறிய பெண்களின் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் சுயதொழில் முயற்சிகளில் அவர்களை ஊக்குவிப்பதற்குமான பயிற்சிச் செயலமர்வு ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யபபட்ட சுமார் 200பேர் இப்பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

இப்பயிற்சிச் செயலமர்வை நடத்துவதற்கு கொழும்பில் இருந்து விஷேட அதிகாரிகள் கொண்ட குழுவொன்று வருகைதரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-8)

### எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சை

வழிகாட்டல் வகுப்புகள்
By: T.திருமுருகன்
பிரிவு I புதன்,வெள்ளி4-6மணி (S.L.T)
பிரிவு II சனி,ஞாயிறு 8-10மணி (S.L.T)
ஆரம்பம்:- 31. 07. 2002 (புதன்)

நியூட்டன்
ஆரியகுளம் சந்தி,
யாழ்.நகர்.

(6511)

### SPOKEN ENGLISH

PRIVATE SCHOOL
426 (302), K.K.S. ROAD, JAFFNA
ஆண்டு 1 - மேற்படிப்புவரை
முக்கிய பாடங்கள்.
சிறந்த ஆசிரியர்கள் பதிவிற்கு:
*தலைமை ஆசிரியர்*
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி.

(6505)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் இராசமணி

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி இரத்தினம் இராசமணி அவர்கள் நேற்று (29.07.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் யோகராசா (யாழ்.சுகாதாரத் திணைக்களம்), புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிராசா (இ.போ.ச.), லிங்கேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் தனுஜன், வாகீசன், கிருபானந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (6501)

தகவல்:
இ.யோகராசா (மகன்)

### அம்பிகைபாகன் கோகிலன்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பிகைபாகன் கோகிலன் 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஷோபவாணியின் அன்புக் கணவரும் சஞ்சாய், கபீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அம்பிகைபாகன் மற்றும் குகனேஸ்வரி (கிளி) தம்பதியினரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - பராசக்தி தம்பதியினரின் மருமகனும் பூலோகத்தின் அன்புப் பேரனும் சுடர்விழி (நோர்வே), அன்பரசி (ஜேர்மனி), சுபாஜினி (சுமதி - இராமநாதன் நுண்கலைப்பீடம், 4ஆம் வருடம்), விசாகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலமுகுந்தன் (நோர்வே), சிவபாலன் (ஜேர்மனி), கலைவாணி, அம்பலவாணர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் யதுஷா, விதுஷன், சிந்து ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அம்பிகை பவனம்",*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.* (6501)

தகவல்:
தாய், சகோதரிகள்.

### திருமதி தெய்வானைப்பிள்ளை காசிகந்தையா

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையில் இடம்பெயர்ந்து வசித்துவந்தவருமான திருமதி தெய்வானைப்பிள்ளை காசிகந்தையா நேற்றுமுன்தினம் (28.07.2002) ஞாயிறு பின்னிரவு 2.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர் கந்தையாவின் அன்பு மனைவியும் சிவசங்கரப்பிள்ளை அமரர் சிவபாக்கியம் மற்றும் சிவபாதம் (குஞ்சு), சிவநேசம், சிவராசா(குட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, திருமதி பார்வதம் சிவபாதம், பாலசுப்பிரமணியம், திருமதி தீலகவதி சிவராசா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (29.07.2002) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் உடுவில், அம்பலவாணர் வீதியில் உள்ள மகளது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு.* (6510)

தகவல்:
பிள்ளைகள்.

### வேலுப்பிள்ளை முத்தையா

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்தையா அவர்கள் நேற்று (29.07.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளியம்மாவின் அன்புக் கணவரும் தயாகுணரட்ணசிங்கம் (A.D.P வவுனியா, கச்சேரி), ஜெயசிங்கம், கலாநிதி, தயாநிதி, தவமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இந்திராணி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ஈஸ்வரமூர்த்தி மற்றும் குலசிங்கம், சிவானந்தம் (கிராம அலுவலர், ஏழாலை வடக்கு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு அளவெட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.* (6508)

தகவல்:
மு.ஜெயசிங்கம்
(மகன்)

## நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல்

கீழ்க் காட்டப்படும் சந்தை/ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான மீள் கேள்வி (01. 08. 2002முதல் 31. 12. 2002ஆம் திகதி வரை) கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திர விநியோகம்: 31.07.2002 நண்பகல் 12.00 மணிவரை.
கேள்வி ஏற்கப்படும் திகதி: 31.07.2002 பிற்பகல் 2.00 மணிவரை.
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 31.07.2002 பிற்பகல் 2.00 மணி.

இக்கேள்வி சம்பந்தமான நிபந்தனைகளை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| சந்தை/இறைச்சிக் கடை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி/ நாள் வாடகை (ப.சே.வரி தவிர) |
|---|---|---|---|
| 01. கொக்குவில் சந்தை | ரூ. 500/= | ரூ. 5000/= | 50,000/= |
| 02. கொக்குவில் உப அலுவலக ஆ. இ. கடை | ரூ. 350/= | ரூ. 3000/= | 125/= |

*குறிப்பு: (1) கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை வாரத்தில் 03 நாள்கள் நடத்தப்படவேண்டும்.*
*(2) தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை வைப்புப் பணமாகச் செலுத்துதல்வேண்டும்.*

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
25.07.2002. (சி-23105)

க.மணிபல்லவராஜன்,
(ஜே.பி.யு.எம்)
தலைவர், நல்லூர் பிரதேச சபை.

## ஆங்கிலதினப் போட்டி ஒத்திவைப்பு

மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டிகளை முன்னிட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவிருந்த எழுத்துப் போட்டிகள் மறுஅறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

## கடையில் திருடிய இளைஞர்கள் நீதிமன்றில் ஆஜர்!

யாழ்ப்பாணம்,ஜூலை30

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள கடையொன்றை உடைத்துப் பொருள்களைத் திருடியதாகத் தெரிவித்து 3 இளைஞர்கள் கோப்பாய்ப் பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

உரும்பிராயைச் சேர்ந்தவர்களான பாலசுந்தரம் நடராஜா, நடராஜா வசீகரன், சண்டிலிப்பாயைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பகீரதன் ஆகிய மூவருமே ஆஜர்செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.(ஏ-10)



பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

கடந்த **27.04.2002** அன்று தமது பணியிலிருந்து ஓய்வுபெற்ற எமது பிரதி அதிபர்

**திருமதி தேவகி துரைராஜா**

அவர்களின்

சிறப்பான சேவையினைப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.

(6521)


மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு!

புதிய **Super Cub 90, Super Cub 70, Super Cub 50** என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்,
64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(6522)


கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 21 |
| 05 | 07 |
| 1969 | 2002 |

**அமரர் அம்பிகைபாகன் கோகிலன்**

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

எமது துறை சக மாணவி அ.சுபாஜினி (சுமதி) அவர்களின் அன்பு அண்ணன் அம்பிகைபாகன் கோகிலன் அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் பல்கலைக்கழக.
இறுதிவருட இசைத்துறை மாணவர்கள்.

**வைத்தியசாலை சுத்திகரிப்புச் சேவை**

இந்த வைத்தியசாலையின் சுத்திகரிப்புச் சேவையை 01.09.2002இல் இருந்து தனியார்துறையினரிடம் கொடுப்பதற்கான விண்ணப்பம் பணிப்பாளரால் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி: 15.08.2002 காலை 10.00 மணி

| | | |
|---|---|---|
| தேவையான ஊழியர் எண்ணிக்கை | - | 10 பேர் |
| மேற்பார்வையாளர் | - | 01 |
| சுத்திகரிப்பு செய்யும் தடவைகள் | - | 04 தடவை |

மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் தொடர்பு கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்.

*யாழ். போதனா வைத்தியசாலை.* (C/23109)

**விழி நீர் சொரிகின்றோம்**

எமது சபையில் கடமை புரியும்
திரு.வ.சிவராசா, திரு.வ.சந்திரலிங்கம்
ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி வயிரவன் வள்ளி**

இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(C/23107)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பணிமனை ஊழியர் திரு.வை.ஞானசேகரம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வைரவன் வள்ளி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை. ஊழியர் நலன்புரிச் சங்கம்.
ஊர்காவற்றுறை.

(C/23108)

## பத்திரிகைத் திருட்டு அதிகரிப்பு

கோப்பாய்,ஜூலை30

நீர்வேலிப் பகுதியில் உள்ள பல சனசமூக நிலைய நூலகங்களின் வாசிப்புப் பகுதியில் வைக்கப்படும் பத்திரிகைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதனால், நீர்வேலி மத்திய சனசமூக நிலையம், சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையம் ஆகியவற்றில் வாசிப்புக்காக பத்திரிகைகள் போடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவங்களுக்கு முன்னர் சகல தினசரி, வார வெளியீடுகள் பொதுமக்கள் வாசிப்புக்கு வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-72)

## கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவராக மீண்டும் சிவஞானம்

அரியாலை,ஜூலை30

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவராக மீண்டும் சீ.வி.கே.சிவஞானம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சமாசத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

பொதுச்சபைக் கூட்டத்தில் சமாசத் தலைவராக மீண்டும் சீ.வி.கே. சிவஞானம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.குமரவேல் சமாசத்தின் உபதலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

சமாசத்தின் இயக்குநர்களாக சி. சுப்பிரமணியம், த.சத்தியதாசன், பெ. தர்மகுலசிங்கம், த.சிவலிங்கம், க.மெய்யழகன் ஆகியோரும் தெரிவாகியுள்ளார்கள். (ஐ-17)

## சாயி சமித்தியில் ஆன்மீகச் சொற்பொழிவு

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஆன்மீகச் சொற்பொழிவாளர் சுவாமி எச்.எச்.பிரபாகரானந்தா சரஸ்வதி ஆச்சார்யா (சனாதன ஏகோபன சமிதி) யாழ்ப்பாணத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்தவுள்ளார்.

திருநெல்வேலி, இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 4.30மணிக்கு அவரது சொற்பொழிவு இடம்பெறும். (ஐ)


லஷ்சுமி இணுவில்.
CAMERON dla2 - Lucxlla
CHARLIES ANGELS
கராட்டிச் சித்திரம் (சீல்)
தினசரி 10.30, 2.30, 6.30 (ப.நே.) (6517)

ராஜா யாழ்ப்பாணம்.
நாளைமட்டும்
அஜீத், ஜோதிகா, வடிவேல் நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30 (C/22943)

நாகம்ஸ் சுன்னாகம்
குணால், தருண், சினேகா, பிரீதா, தாமு நடித்த
புன்னகைதேசம்
(சீல்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.) (6508)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
அர்ஜுன், சிம்ரன், விஜயகுமார் நடித்த
கொண்டாட்டம்
காட்சிநேரம்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C/22944)


# மரண அறிவித்தல்கள்

## தம்பாபிள்ளை சின்னையா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை சின்னையா அவர்கள் நேற்று (29.07.2002) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரி (லண்டன்), சிவயோகநாதன், குலேந்திரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (மட்டக்களப்பு), கருணானந்தன் (கனடா), இராசேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் Dr. யோகலிங்கம் (லண்டன்), ராணி, கலாவதி (ஜேர்மனி), Dr. ரவீந்திரநாத் (பீடாதிபதி, விவசாயபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), நந்தினி (கனடா), ஜெயபவானி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகினி, ஜெகன், ரவிராஜ், நந்தா, கஜேன், கௌசி, துஷ்யந்தி, அபிராமி, கோபி, சிந்துஜா, சங்கவி, ஜெசிந்தன், அருண்யா ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, வல்லிபுரம், பூரணம், பாக்கியம் மற்றும் கண்மணி, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, இராசம்மா, ஐயாத்துரை, அப்பையா, கந்தையா, பொன்னுத்துரை மற்றும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் சரஸ்வதி, இராசம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவயோகநாதன்
(மகன்)

*மதவடி லேன்,*
*கோண்டாவில் கிழக்கு.* (6516)

## திருமதி கிறிஸ்தோ பாக்கியம்

பலாலி புனித செபத்தியார் ஆலயத்தைச் சேர்ந்தவரும் விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கிறிஸ்தோ பாக்கியம் 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மோட்சலங்காரம், நட்சேத்திரம் தங்கம், மாசில்லாமணி (கிராம சேவையாளர்), செபமாலையம்மா, மரியதாஸ், காலஞ்சென்ற அன்ரனி அல்பிரேட் நேவிஸ் எமலி, காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மிக்கேல், பிலிப்பு மத்தியூஸ் (உதவி அரசாங்க அதிபர் - கண்டாவளை), பிரான்சிஸ், ஜோய் கிருபாகரன், மேரித்திரேசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செபஸ்ரியன் ஜெசி ஆஞ்சலா (பிரான்ஸ்), எட்வேட் அமலதாஸ் பற்றீசியா (ஜேர்மனி), வில்லியம் யேசுதாஸ் மெட்டிலா (நோர்வே), கொட்பிறி பிரசனா, கொட்பிறி மேசியா, டியோனிஸ் புறுனோ, டியோனிஸ் பபியான, மேரி பாபின்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாவிலா, சர்மிலா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விசுவமடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு விசுவமடு புனித இராயப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.மரியதாஸ (மகன்)

*புன்னைநீராவியடி,*
*விசுவமடு.* (6519)

## முருகேசு வைரவப்பிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வைரவப்பிள்ளை 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நல்லம்மா தம்பதியினரின் தவப்புதல்வனும் காலஞ்சென்ற ஞானரத்தினத்தின் அன்புக் கணவரும் மாணிக்கம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினசபாபதி (சுவிஸ்), கனகசபாபதி (சுவிஸ்), சிவகுமாரன் (பவா - உரிமையாளர், அம்பாள் பல்பொருள் வாணிபம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் பரமானந்தராசா (சுவிஸ்), ஆனந்தராசா (கனடா), இராஜேஸ்வரி (சுவிஸ்), இரத்தினேஸ்வரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (இணுவில்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆனந்தன் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), சிறிசண்முகராஜா (சிவா - உரிமையாளர், அம்பாள் பல்பொருள் வாணிபம் - யாழ்ப்பாணம்), ராகினி (சுவிஸ்), சூரியகலா (சுவிஸ்), பாமினி (இணுவில்), உதயவேணி (சுவிஸ்), நிரஞ்சலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபேன் (சுவிஸ்), சுபிந்தன் (சுவிஸ்), றெபேக்கா (சுவிஸ்), பரமேஸ்வரன் (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), கௌசிகா (சுவிஸ்), அபிநயா (சுவிஸ்), சோபிதா (இணுவில்), சுகன்ஜா (இணுவில்), துஷந்திகா (இணுவில்), சுதர்மிகா (இணுவில்), பானுகா (சுவிஸ்), பானுஜன் (சுவிஸ்), சுபேக்கா (இணுவில்), நிரோஷன் (இணுவில்), நிலஷ்சன் (இணுவில்), நிதர்ஷன் (இணுவில்), விதுஷன் (இணுவில்), அருச்சுனியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகுமாரன் (மகன்),
சிறிசண்முகராஜா
(மருமகன்).

*இணுவில் கிழக்கு,*
*அங்கிளப்பாய்.* (6492)

## கணபதிப்பிள்ளை கோவிந்தசாமி

விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோவிந்தசாமி நேற்றுமுன்தினம் (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்வதிதேவி (ஆசிரியை), பாக்கியலட்சுமி, பரஞ்சோதி, பரமேஸ்வரன், மகேஸ்வரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன், சிவகரன், உமாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகா, அருந்ததி, தர்மினி ஆகியோரின் அன்புப் பேரனும் முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவநாயகம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2002) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி, கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நகுலேஸ்வரி
(மனைவி).

தற்காலிக முகவரி:
*வாசிகசாலையடி,*
*பன்னாலை, தெல்லிப்பழை.* (6520)

# மேலதிக விசாரணைக்காக பேராதனைக்கு மூன்று சடலங்களும் அனுப்பிவைப்பு

## புலிகளால் இருவர் கைது; பொலீஸார் விசாரணை

கொழும்பு.ஜூலை30

தட்சணாமருதமடுப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட மூன்று சடலங்களும் மேலதிக விசாரணைக்காக பேராதனை வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டன.

இச்சடலங்கள் புலிகளினால் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்தே அவை பேராதனைக்கு அனுப்பப்பட்டன.

இச்சடலங்கள் குறித்து புலிகள் விசாரணை மேற்கொண்டு கொலைகள் என்று தெரிவித்தனர் எனவும் அது தொடர்பாக ஒருவரை அவர்கள் கைதுசெய்திருக்கின்றனர் எனவும் வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் விஸ்பிரட் மகா நாயக்க அறிவித்திருக்கிறார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் அவர் அறிக்கைகளை அனுப்பியிருக்கிறார்.

சடலங்களில் ஒன்று திகன பகுதியைச் சேர்ந்த ஒருவருடையது என்று அடையாளம் காணப்பட்டது. ஏனைய இரு சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து இரண்டு விசேட பொலீஸ் குழுக்கள் விசாரணை செய்துவருகின்றன.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் இருவரைக் கைதுசெய்திருப்பதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது. (ஐ)

### 'பொலன்னறுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதை ஒரு 'ஜோக்'காக எடுத்திருக்கின்றனர். தங்களுக்குத் தேவையான கட்டத்தை மட்டுமே காண்பிக்கின்றனர். இவை தானா இன்று இருக்கும் பிரச்சினைகள்? எனது கைப்பையில் இருக்கும் குண்டே பிரச்சினை. எனது கைப்பையின் வடிவம், அடுத்ததாக எனது ஆடையின் வடிவம், யாரிடம் வாங்கினேன் என்று வினவுவார்கள்; எந்தக் கம்பனியில் வாங்கினேன் என்று கேட்பார்கள்.

இப்பொழுது என்னிடம் கேட்கிறார்கள், வாகனங்கள் வாங்கிய கம்பனி, அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களை. போய்த் தேடிப்பார்த்துக்கொள்ளட்டும். என்னிடம் ஏன் கேட்கின்றார்கள்?

ஐ.தே.க. அமைச்சரவையில் இன்று கூடுதலாக 'பிஸ்னஸ்'காரர்களே இருக்கிறார்கள். இதை அவர்கள் தேடிப்பார்க்க முடியும்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

### கூட்டமைப்பினரை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளுக்கு நேரடியாகச் சென்றுவந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, மீள்குடியேற்றம் குறித்து இறுதி அறிக்கையைத் தயாரித்திருக்கிறார். அந்த அறிக்கை இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதற்கிடையே, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களும் மீண்டும் குடியமர்த்தப்படுவதை எதிர்பார்த்திருக்கிறார்கள். (ஐ)

### வைகோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து இந்தியப் பிரதமர், இந்திய ஜனாதிபதி மற்றும் ஐ.நா. சபையின் செயலர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்கள், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தால் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**அச்சுவேலியில்...**

யாழ். குடாநாட்டில் அச்சுவேலியில், அச்சுவேலி வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி, அச்சுவேலி மத்திய கல்லூரியிலிருந்து முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமானது.

இப்பேரணி அச்சுவேலி பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு வர்த்தக சங்கத் தலைவர் பொ.அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். அங்கு வைத்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. இணுவில் பகுதியிலும் நேற்றுமாலை அப்பகுதி இளைஞர்களால் ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

**சுவிஸில்...**

வைகோ கைதானதைக் கண்டித்து சுவிற்ஸர்லாந்திலும் நேற்று அந்நாட்டு நாடாளுமன்றம் முன்பாகக் கண்டனக் கூட்டம் ஒன்று, அனைத்துலக தமிழர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கண்டனக் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கலந்து கொண்டிருந்தனர். கூட்டத்தின் இறுதியில் இந்தியப் பிரதமருக்கும் இந்திய உள்துறை அமைச்சருக்கும் தமிழக முதல்வருக்கும் ஐ.நா.சபையின் செயலருக்கும் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை - வைகோவின் கைதைக் கண்டித்து நாளை புதன் கிழமை மட்டக்களப்பு, பட்டிருப்புத் தொகுதியிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ-9)

### ஆள்திரட்டலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்துவதன் மூலம் நிரந்தர சமாதானத்துக்குத் தயாராகிறார்கள்.

புலிகள் இயக்கத்தின் பொறுப்பு மிக்கதும் விவேகமானதுமான அறிக்கை விசேடமாக, உற்சாகமூட்டுவதொன்றாகும். அதாவது பேச்சு நடத்துவதற்கான ஒரு முன்நிபந்தனையாக யுத்த நிறுத்த உடன்படிக்கை அரசாங்கத்தால் நூறு சதவீதம் நடைமுறைப் படுத்தப்படவேண்டும், என்று தாங்கள் வலியுறுத்தப்போவதில்லை புலிகளின அந்த அறிக்கை கூறுகிறது.

யுத்தநிறுத்தம் கடந்த ஐந்து மாதங்களுக்குக் கூடுதலான காலம் நீடித்திருக்கிறது. பொதுமக்களின் பெரும் நன்மைக்காக ஏ-9, ஏ-5 பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. யுத்தநிறுத்த காலத்தில் இரு தரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகரமாகத் தவிர்த்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள 159 வழிபாட்டிடங்களில் இரண்டில் மட்டுமே படையினர் தற்போது நிலைகொண்டுள்ளனர். மூன்றில் ஓரளவு நிலைகொண்டிருக்கின்றனர். கூடுதல் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அடங்குவதால் 19 வழிபாட்டிடங்களுக்குப் பொதுமக்கள் செல்லமுடியாதிருக்கிறது.

பெரும்பாலான பாடசாலைக் கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேறிவிட்டனர். மன்னாரில் ஒரு பாடசாலையிலும் திருகோணமலையில் ஒரு பாடசாலையிலும் யாழ். மாவட்டத்தில் 11 பாடசாலைகளிலும் மட்டுமே படையினர் உள்ளனர். ஜூலை மாதம் 20ஆம் திகதிய நிலைவரம் இவையாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறவேண்டிய இறுதித் தினமான ஓகஸ்ட் முதலாந் திகதியன்று படையினர் வெளியேற வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கை இதனைவிடக் குறைவானதாக இருக்கலாம்.

தேசிய கடல் எல்லை குறித்தும் கடல் பகுதிகளை யார் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பது பற்றிய பலதரப்பட்ட கருத்துக்கள் குறித்தும் கடந்த வாரங்களில் கவனம் அதிகரித்திருந்தது. ஆனால், யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பாரிய அச்சுறுத்தலாக அவை அமையவில்லை.

பணம் பறித்தல், சிறுவர்களைச் சிப்பாய்களாக்குதல், கடத்தல் ஆகியவை குறித்து முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தமது இயக்கம் மீது இவை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறை தாக்கத்தைப் புலிகள் இயக்கம் உணரும் என்று க்ண்காணிப்புக் குழு நம்புகிறது.

இரு தரப்பினதும் பலம் பற்றிய நிலை மாறாது பேணப்படுவது மிகவும் முக்கியமானது. யுத்தநிறுத்த உடன்பாட்டின் மூலைக் கல்லாகவே அது கருதப்படக்கூடியது. எனவே வழமையான ஆள்திரட்டலும் பயிற்சியும் யுத்தத்துக்கான ஆயத்தங்களாகக் கருதப்படாது. பலம் பற்றிய மாறா நிலைப்பாட்டைப் பேணும் விடயத்திலும் சமாதான நடவடிக்கைகளிலும் ஓர் இயல்பான பகுதியாகவே கருதப்படவேண்டும்.

சமாதானத்தில் தமது அர்ப்பணிப்பைப் பின்வரும் வழிகளில் இரு தரப்பினரும் எடுத்துக்காட்டியுள்ளனர். யுத்தநிறுத்த உடன்படிக்கையை உறுதியாக நடைமுறைப்படுத்துதல், நெருக்கடியான வேளைகளில் பாராட்டத்தக்க பொறுமை, ஒத்துழைப்பிலும் ஒருங்கிணைப்பிலும் சாதனைகள் - இவற்றின் மூலம் இரு தரப்பினரும் பல தசாப்த மோதலினால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற நிலையையும் அவநம்பிக்கையையும் அகற்ற முடிந்திருக்கிறது.

இருதரப்பினரும் யுத்தத்தில் ஈடுபடுவது கடந்தகால ஒரு சம்பவம் என்பதே கண்காணிப்புக் குழுவின் முடிவாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மண்டூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக மண்டூர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெட்டி ஆராய்ச்சியிடம் வினவியபொழுது, பொலீஸார் கூட்டத்தைக் கலைக்க ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறினார்.

ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருந்தால் பொதுமக்களில் நால்வருக்கு எப்படித் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் ஏற்பட்டன என்று வினவியபோது அதுபற்றித் தமக்கேதும் தெரியாது என்று அவர் பதிலளித்தார்.

கிராமப்புறங்களில் நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் குழுவினர், சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இச்சம்பவத்தை அடுத்து மண்டூரில் பதற்றம் நிலவுகிறது. நேற்று அங்கு பாடசாலைகள் இயங்கவில்லை.(ஐ-9)

### தமக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது சிபாரிசு இல்லாமல் அமைச்சரவையிலிருந்து யாரையும் ஜனாதிபதி நீக்கவும் முடியாது சேர்க்கவும் முடியாது என்ற சாரப்பட திட்டவட்டமான பதிலை பிரதமர் தெரிவித்திருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு பிரதமருக்கு தாம் திருப்பி அனுப்பிய பதிலிலேயே வரையறையற்ற அதிகாரம் தமக்கு இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிரதமர் கடந்த 19 ஆம் திகதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அமைச்சரவை உறுப்பினர்களை நியமிக்கும் போது, பிரதமரின் ஆலோசனைகளை மட்டும் கருத்திற்கொண்டு அந்த நியமனங்கள் அமையவேண்டும் என்று ஏற்கனவே இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அத்தகைய பேச்சோ, இணக்கப்பாடோ காணப்படவேயில்லை.

அமைச்சரவை உறுப்பினர் ஒருவரை அமைச்சரவையிலிருந்து நீக்கும் போது அரசமைப்பின் 47 ஆவது அல்லது 44 (3) சரத்தே கருத்திற்கொள்ளப்படும். இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கு வரையறுக்க முடியாத தீர்மானத்தை எடுக்கக்கூடிய அதிகாரம் உண்டு என்று எனக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

- இப்படி ஜனாதிபதி தனது பிந்திய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நாட்டுக்குத் திரும்பும் வரையிலேயே தனது பதில் கடிதத்தைத் தாம் தாமதப்படுத்தியதாகவும் அதில் மேலும் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

தமது கைப்பையில் தாம் கைக்குண்டு கொண்டுவந்ததாக அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியபோதும், அமைச்சர் ரவி அப்படியொரு குற்றத்தையும் புரியவில்லை என்று பிரதமர் இப்போது குறிப்பிடுவது வியப்புக்குரிய விடயம் என்று ஜனாதிபதி சந்திரிகா பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.(ஐ-9)




இன்று மாலை ஆரம்பமாகிறது!

சமாதானக் குரல்

மாபெரும் இன்னிசை நற்செய்திப் பெருவிழா

உங்களுடன் தந்தை S.J.பெர்க்மான்ஸ் அவர்கள்

அனுமதி இலவசம்

துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4 மணி

இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும், சந்தோசமும், விடுதலையும் கொண்டுவரும் நிகழ்விற்கு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பு:

மனதுருக்கம் இலங்கை, 021-328

(6064)



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

MCS

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 01.08.2002 இற்கு முன் நேரில்

SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 |  | 01 |
| 04 | | 07 |
| 1954 | | 2002 |

### அமரர் குணரத்தினம் நம்பிராசா

குடும்பத்தின் குல விளக்காய் இருந்து
உழைத்த உங்கள் உடல் ஓய்வு தேடியதோ?
கலங்கரை விளக்காய் காட்சி தந்த உங்கள் உடல்
கடவுள் இருப்பிடம் தேடியதோ?

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (31. 07. 2002) புதன்கிழமை இடம்பெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வீதி,*
*பண்டத்தரிப்பு.* (6485)

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா (பெ.க.)

(முன்னாள் புகையிலை சுருட்டு வர்த்தகர் - கண்டி)

உடுப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா அவர்கள் நேற்று (29.07.2002) திங்கட்கிழமை இரவு 10.30 மணிக்கு காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் கோகிலகானம் (ஜேர்மனி), தட்சனேஸ்வரன், பிறேமகானம், விஜயகானம் (ஜேர்மனி), தயாளேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பென்றோ, அற்புதமலர் (சாந்தினி), பாலரட்ணம், சுதா ஆகியோரின் அன்பு மாமனாரும் டயனா, விக்ரோறியா, சுபிதா, பாலகௌரி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தையல்முத்து, பூரணம், பாக்கியம், சின்னத்தங்கம், பாலசுப்பிரமணியம், கனகலிங்கம், முத்துக்கிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுப்பிராய் கிழக்கு,*
*உடுப்பிராய்.* (C/23112)

தகவல்:
சிவக்கொழுந்து (மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.